இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஐப்பசி. Oct. 2014
Free Circulation

# வெற்றிமணி
## Vettimaniy

மணி 64
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Orientalische Textilien & Schmuck
24ம் ஆண்டுநிறைவை
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# சீனாவின் இலங்கை மீதான கொள்கையும்
# சாதாரண குடிமக்களும்

## யேர்மனியின் முகமாகத் தமிழ் மாணவி!

FACE OF GERMANY




வாசகர்களுக்கு எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



ஜெயலலிதா

## யாழ்ப்பாணத்து வழுக்கையாறு



T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ATHAVAN TV
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 05

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 6ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
S.K.Silks & Gold Paraadise
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
Sep.15 முதல் Oct 22 வரை
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
Mr.P.Sritharan.
Proprietor
சேலைகள் 30% முதல் 60% வரை
கழிவு விலையில் பெற்று மகிழுங்கள்
Adler str 33 - 44137 Dortmund
டோட்மூண்ட் நகரில்
மாபெரும் ராஜமுத்திரை
Tel:0231 9501 647

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN


# நம்பமுடியாத உண்மைகள்!

மாதவி

## விமானி நினைக்க விமானம் பறக்கும் !இறங்கும்!!

## யேர்மனியல் விஞ்ஞானிகளின் சாதனை!!!



யேர்மன் நாட்டு விஞ்ஞானிகள், விமானியின் மூளை நினைக்க விமானம் ஓடும் விந்தையை கண்டுபிடித்துள்ளனர். அதாவது மனம் நினைக்க விமானம் பறக்கும்.

கைகளாலோ கால்களாலோ எதைனையும் அழுத்தத் தேவை இல்லை. மனம் நினைக்க விமானம் இறங்கும். அதற்குரிய பொத்தான் கதிர்வீச்சால் அமுக்கப்படும். விமானமும் திருப்பப்படும். தலையில் பொருத்தப் பட்டிருக்கும் நரம்பு தொடர்புச்சாதனம் இதனை உடனுக்கு உடன் விமானத்திற்கு அறிவிக்கும். எப்படி உடல் உறுப்புகளுக்கு மூளை செய்திகளை அனுப்ப, உடம்பு செய்திக்கு ஏற்ப இயங்குகின்றதோ! அதுபோல் மூளை இனி விமானத்திற்கு நேரடியாக செய்தியை அனுப்ப, அவை இயங்கும். இதன் மூலம விமானம் பறக்கும் தரையிறங்கும்.

அட டா!! மனம் தன்பாட்டுக்கு அலையப் புறப்பட்டால் கதி! நினைக்வே கதிகலங்குகின்றது. எதேதோ நடக்குது. நெஞ்சுக்கள் தீப்பொறி பறக்குது என்று யாரவது பாடல் எழுதினால், இனி உண்மையில் இதயம் தீபடித்துவிட்டாலும் ஆச்சரியம் இல்லை.

## இரகசிய வேலைக்கு இரசியா! அன்றும்,இன்றும்!



மொஸ்க்கோவில் உள்ள நெர்லாந்து தூதரகத்தில் விசித்திரமாக 2 பூனைகள் உலாவந்தனவாம். அவற்றைக் கண்காணித்தபோது அவை இரசியாவின் உளவுப்பூனைகள் எனத் தெரியவந்ததாம். பூனைக்குள் இரகசிய ஒலிப்பதிவுக் கருவிகள் இணைக்கப்பட்டு இருந்தவை தெரியவந்தது. சந்திரனுக்கே நாயை அனுப்பியவர்கள் பூமியில் உள்ள தூதரகத்திற்கு நாயின் எதிரியை அனுப்புவது என்ன பெரிய வேலையா. இரகசிய வேலைக்கு இரசியா அன்றும் இன்றும்.





## கொண்டாட்டம்

யேர்மனியில் தைப்பொங்கல் போல் ஒக்ரோபர் மாதம் ஒரு திருவிழா நடக்கும். அன்று தோட்டத்தில் விழைந்த பூசனி மற்றும் பழங்கள் யாவற்றையும் காட்சிக்குவைத்து, நன்றிகூறி ஆடி மகிழ்வர். மகிழ்வூட்ட இருக்கவே இருக்கிறது யேர்மனியில் பியர். இதுவும் ஒரு தானியத்தின் விதையில் இருந்து பெறப்படுவதுதானே. பியருக்கு பெயர்போன மாநிலம் பயேன் மாநிலம். சூரியனுக்கும் இயற்கை தந்த செல்வத்திற்கும் நன்றிசொல்வதாக நினைத்த இந்த ஒக்ரோபா; (Oktoberfest) திருவிழா, உண்மையில் பவறியாவின் (Peince in Bavaria 1810) அரச திருமண விருந்து விழாவே. அன்று 1810 இல் நடந்ததையே தொடர்ந்து ஒரு நிகழ்வாக ஒரு கலாச்சாரப் பண்டிகையாக வருடம்தோறும் கொண்டாடி வருகின்றனர். அன்று குதிரை ஓட்டம் சிறப்பு நிகழ்வாக இருந்தது 1811ம் ஆண்டு குதிரை ஓட்டத்துடன் மண்ணில் விழைந்த உணவுப்பொருட்களும் காட்சிக்குவைக்கப்பட்டன. இன்று குதிரை ஓட்டம் குறைந்தாலும் பலபேர் வெளியரங்கில் கதிரையில் இருந்து கைகோர்த்து ஆடிப்பாடி பியர் குடித்து மகிழ்கின்றனர்.

## இன்ப உதை!



ரைற்ரானிக் படத்தின் கதாநாகன் Leonardo ஏன் இந்தப்பெயர் வந்தது தெரியுமா. அவரது தாயார் இத்தாலியில் கண்காட்சியகத்தில் Leonardo d vinci Paintings பார்த்துக் கொண்டிருந்த வேளைதான் முதல் முதல் வயிற்றுக்குள் இருந்து ஒரு கிக்கொடுத்துள்ளான் Leonardo. அதாவது இன்ப உதை.

உடனே தாய் தனக்குப் பிறக்கப்போகும் பிள்ளைக்கு Leonardo d vinci இன் பெயரையே வைப்பது என முடிவு செய்துவிட்டாராம். அம்மா என்றால் உலகமெங்கும் ஒரே குலம், ஒரே உணர்வு. நமது நாட்டில் பிள்ளைகளுக்கு பெயர் வைப்பதற்கும் காரணங்கள் இருக்கும். ஆனால் ஒரு காலத்தில் காரணங்கள் அத்து மீறிவிட்டன. யேர்மனியில் பிறந்தபடியால் யேர்மனிக்கா பிரான்ஸில் பிறந்தபடியால் பிறான்சிக்கா. நல்லவேளை இலங்கையில் அங்கொடையில் பிறந்திருந்தால் அங்கொடைக்கா என்று பெயர்வைக்கவேண்டி வந்திருக்கும். இந்தப் பெயர்கள் எல்லாம் நம்மவர்கள் இடம்பெயர்ந்த புதிதில் வைத்த பெயர்கள். அப்போது இப்பூமி, அதிசய பூமியாத் தெரிந்தது. இப்போ அப்படி அல்ல! அழகிய தமிழ்ப் பெயர்களை பிள்ளைகளுக்குச் சூட்டி மகிழ்கின்றார்கள். தமது பிள்ளைகளின் பெயர்களைவிட பேரக்குழந்தைகளது பெயர்கள் எவ்வளவோ சிறப்பாக இன்று உள்ளதை அவதானிக்க முடிகிறது.





உங்கள் எதிர்கால நலன்களுக்காக வீடு வாங்க வேண்டுமா?

எதுவித பிரச்சனையுமின்றி வாங்க வேண்டுமா?

உங்கள் எதிர்கால கணவை நிறைவேற்ற வேண்டுமா?

உடனே தொடர்பு கொள்ளுங்கள்
etno 24
Tel: 02871 242555 3
info@etno24.de



கணேசா நகையகம்
தரம் நிரந்தரம் GANESHA JEWELS
Finest 22ct Gold Diamond White Gold jewellery and Repair
பொன்னுருக்குதல் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.
வைரத்தாலிக்கொடி நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
திருத்தல் வேலைகள் உடனுக்குடன் செய்து தரப்படும்.
பழைய நகைகளை மாற்றி, புதிய சிங்கப்பூர் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.





330 High Street North-Eastham/E12 6PH-Tel:0208 470 7844
e.mail:ganeshajewels@hotmail.co.uk


அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
——————கவிஞர்.வி.க

ஓசை 217



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962



Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements


# சீனாவின் இலங்கை மீதான கொள்கையும் சாதாரண குடிமக்களும்



**காலிமுகத்திடலுக்கு அருகில் 233 ஏக்கர் கடற்பரப்பை நிரப்பி கொழும்பு துறைமுக நகரம் ஒன்று 1337 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப் படவுள்ளது. இந்த திட்டத்தினால் உயர்குடி மக்களும் அரசியல் செல்வாக் குள்ளவர்களும் பயனடைவர்.**

**-அ.நிக்ஸன்-**

இனப்பிரச்சினை தீர்வு என்பதை விட இனப்பிரச்சினையை வைத்துக் கொண்டு கட்சி அரசியலையும் ஆட்சி அதிகாரத்தையும் தக்க வைக்கின்ற செயற்பாடுகள் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திடம் மாத்திரமல்ல இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் பதவியில் இருந்த அரசாங்கங்களிடம் இந்த பண்பை காணமுடியும். அபிவிருத்தி என்ற பெயர்பலகையுடன் ஆட்சிக்கு வருகின்ற கட்சிகள் குறிப்பாக ஜனாதிபதிகள் மக்களின் வாழ்க்கை யில் எற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பாக சிந்தித்ததாக இல்லை. மக்கள் அபிவிருத்தி என்ற பெயரில் உயர் குடிமக்கள், முதலாளிகள், அரசியல் செல்வாக்குடைய வர்கள், அமைச்சர்களின் ஆதர வாளர்கள், உறவினர்கள் ஆகியோரின் சுகபோக வாழ்கைக் கான ஏற்பாடுகள் மாத்திரமே இடம்பெறு கின்றன.

## வெவ்வேறு பிரச்சினைகள்

ஆணைப்பசிக்கு சோளப் பொரிபோல் சாதாரண குடிமக்களின் பசியைத் தீர்க்க அவ்வப்போது ஏதோ வீசப்படுகின்றன. இலங்கையின் அரசியல் பிரச்சினை களுக்கு அப்பால் வடக்கு கிழக்கு உள்ளிட்ட 25 மாவட்டங்களிலும் வெவ்வேறுவிதமான பிரச்சினைகள் உண்டு. அவற்றில் சுகாதாரம், குடிநீர், வீட்டுவசதி பிரச்சினைகள் முக்கியமானதாகும். மக்களின் அடிப்படை வாழ்வுக்கு தேவையான உணவு, உடை, உறையுள் என்ற மூன்று அம்சங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பது கேள்வியாகும். வரவு செலவுத்திட்ட அறிக்கையில் அபிவிருத்தி வளர்ச்சிகள் தொடர்பாக காண்பிக்கப்பட்டிருக்கும் வளர்ச்சி வீதங்கள் தொடர்பான சந்தேகங்களை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த வருட அறிக்கைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது புள்ளிவிபரங்களில் முன்னுக்கு பின் முரண்பாடுகள் இருப்பதையும் அவதானிக்கலாம்.

உதாரணமாக கடந்த ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கை ஒன்றில் பொருளாதார வளர்ச்சி 6சதவீதம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் கடந்த நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் பொருளாதார வளர்சசி வீதம் 7 சதவீதம் என்றும் இது கடந்த 2012ஆம் ஆண்டை விட இரண்டு சதவீத வளர்ச்சி எனவும் கூறப்பட்டிருந்ததாக ஐக்கியதேசிய கட்சியின் பொருளாதார நிபுணர் ஹர்ஷா டி சில்வா சுட்டிக்காட்டி யிருந்தார். அத்துடன் ஒவ்வொரு அமைச்சுகளும் தங்களுடைய அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையும் மத்திய வங்கியின் அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதாகவும் அவர் கூறியிருந்தார். இவ்வாறான முரணான அறிக்கை களினால் மொத்தத்தேசிய உற்பத்திபற்றியும் சாதாரண மக்களின் பங்களிப்புடன் பெறப்பட்ட உள்ளூர் வருமானங்கள் குறித்தும் சரியாக அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## தரவுகள் தகவல்கள்

தரவுகள் தகவல்கள் எதற்காக மூடி முறைக்கப்படுகின்ற என்பது தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் முன்வைக் கப்பட்டாலும் அதற்கு ஆளும்தரப்பு மாத்தரமல்ல எதிர்க்கட்சியாகவுள்ள ஐக்கிய தேசிய கட்சியும் பொறுப்புக் கூறியதாக வேண்டும். ஏனெனில் அவர்களும் ஆளும் கட்சியாக இருந்தவர்கள். 1978ஆம் ஆண்டில் இருந்து 194ஆம் ஆண்டுவரை 17 வருட ஆட்சியின்போது ஐக்கியதேசிய கட்சி அரசாங்கமும் முன்வைத்த அறிக்கைகள் முன்னுக்கு பின் முரணாகவே இருந்தன. ஐக்கியதேசிய கட்சி அரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்த அமரர் றொனிடிமெல் சந்திரிக்கா அரசாங்கத்தில் கட்சிமாறி அமைச்சுப் பதவியை ஏற்றபோது ஐக்கியதேசிய கட்சி அரசாங்கத்தில் முன்வைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி பற்றிய சில தகவல்கள் தவறானவை என்று கூறியிருந்தார். ஐக்கியதேசிய கட்சி ஆட்சியில் 11 வருடங்கள் நிதியமைச்சராக இருந்த ஒருவர் அவ்வாறு கூறும்போது அரசாங்கம் பற்றிய நம்பகத் தன்மைகளில் கேள்விகள் எழுகின்றன.

அதேவேளை 2014ஆம் ஆண்டுக்கான யூலை மாதம் வரையான மத்திய வங்கியின் இடைக்கால அறிக்கையில் 180மில்லியன் அமெரிக்க டொலர் மிகுதி வருமானமாக கிடைக்கவுள்ளது என்றும் இதனால் இலங்கையின் வெளிநாட்டு நிதியிருப்பில் பற்றாக்குறை ஏற்படாது எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த நிலை காரணமாக ரூபாவின் பெறுமதி உயர்வடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டில் கடந்த ஆறுமாத காலத்தில் பெறப்பட்ட கடன் அதற்கான வட்டிவீதம் பற்றி அந்த அறிக்கையில் விபரங்கள் இல்லை. ஆகவே அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய தரவுகள் தகவல்கள் சரியானவையாக இல்லை என்பது தெரிந்த நிலையில் சாதாரண மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை எந்த அடிப்படையில் நோக்குவது? மக்களின் சொந்த முயற்சி,

வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் அனுப்பும் பணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வடக்கு கிழக்கு மக்கள் தங்கள் வாழ்வில் கணிசமான அளவு முன்னேற்றத்தை காண்கின்றனர். மத்திய கிழக்கில் பணியாற்றும் பெண்களின் வருமானத்தை அடிப்படையாக் கொண்டு தென்பகுதியில் சில குடும்பங்கள் தங்கள் வாழ்வின் தரத்தை குறைந்தளவு மட்டத்தில் உயர்த்தியுள்ளன.

தொடர்ச்சி 07ம் பக்கம்





அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# காதோடு காதாக!



**கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்**

ஆசிரியர்: வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்!
மாணவன்: தப்பு சார். வாய்விட்டுச் சிரித்தால் நோய் வந்து சேரும்.
ஆசிரியர் : என்னடா உளறுகிறாய்.

மாணவன்: வாய்விட்டுச் சிரிப்பதால் -வைரஸ்-க்களால் பரவும் நோய்கள் மூச்சு மூலம் மற்றும் உமிழ்நீர் மூலமும் தொற்றிக்கொள்ளும் வாய்ப்பு அதிகம், என்று மருத்துவ ஆய்வுகள் அடித்துக்கூறுகின்றன.

நிருபர்: உங்கள் கணவரின் மறைவு பற்றி ஒரு நடிகையிடம்...

நடிகை: கணவர் இறக்கும் போது, நான் அவர் அருகில் இருந்தேன். எதுவித கஷ்டமும் இன்றி அவர் **Peaceful ஆகப் போய்விட்டார்.** அது எனக்குச் சற்று ஆறுதல் தருகின்றது.

நிருபர்: அவர் உயிருடன் இருக்கும்போது அவர் Peaceful ஆக இருக்கவில்லையே? நீங்கள் இருவரும் Piece Piece ஆக வெவ்வேறாக அல்லவா இருந்தீர்கள்.

நடிகை: ஆம் பிரிந்து வேறு வேறாக இருந்தபடியால்தான் இருவரும் Peace ful ஆக இருந்தோம்



# அன்று காதல் அப்படி இன்று காதல் இப்படி

பொன்னர்: எங்கடை காலத்து சினிமாப்படங்களில் காதலன் காதலியை அல்லது காதலி கதாநாயகன் கதாநாயகியை பாடும் பாடல்களில் .......
**நாதா! சுவாமி! கண்ணா! மன்னவா! அன்பே! அமுதே! ஆரமுதே! தேனே!** என்று அழைக்கும் சொற்கள் இருக்கும். ஆனால் இந்தக் காலத்துப் பாடல்களில் **அசுரா! அரக்கா! திருடா! இராட்சதா! குட்டிப்பிசாசே! லூசுப்பெண்ணே! இராட்சசி! திருட்டுக்கழுதை!** என்ற சொற்கள் இருக்கின்றதே ஏன்.

கனகர்: அந்த அந்தக் காலகட்டத்தில் நடப்பதையும், இருப்பதையும், பிரதிபலிப்பதுதான் சினிமாவும் அதில் வரும் பாடல்களும். ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்துகொள்ள அன்று Dating இருக்கவில்லை. இன்று அந்த Dating மூலம். ஒருவருரோடு ஒருவர் நன்றாகப் பழகி அவர்களின் குணங்களை நன்கு அறியும் வாய்ப்பும் வசதியும் இருக்கின்றது. அப்படி அறிந்தவற்றை பிரதிபலிக்கும் சொற்கள்தான் இன்று பாடல்களிலும் வருகின்றன.

# எதற்கு எடுத்தாலும் அமெரிக்காவா! வா இங்கே!! அது எம்மிடமும் உண்டு!!!

நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கையில் சொன்னார், " அமெரிக்கர்களிடம் ஒரு பழக்கம் உண்டு. யாராச்சும் தும்மினால் " Bless you" என்று வாழ்த்துவார்கள்.

அது மேனாட்டுச் சமாச்சாரம்". நம்ம ஊர்ல அந்தப் பழக்கம் இல்லை என்று !

"நம்மிடையே அந்தப் பழக்கம் இப்போது சில இடங்களில் சில நேரங்களில் இல்லாமல் இருக்கலாம், ஆனால் நிச்சயம் இருந்திருக்கிறது" இருக்கிறது என்று கூறி, இந்தக் குறளைச் சொன்னேன்.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

இதுக்கு என்ன அர்த்தம் என்று கேட்டார். பரிமேலழகர் தொடங்கி கலைஞர், பாப்பையா, நண்பர் புகாரி என எல்லாருமே குறளுக்கு விளக்கம் எழுதியிருக்காங்க, கூகிள் ல தேடிக்கோ மச்சி என்று சொன்னேன்!

அவர் தேடிட்டிருக்கார் போல.

**சேவியர்**




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# பெண்களை விருந்துக்கு அழைத்து ....பின்!






## விழிப்பாய் இருந்தால், விழாமல் இருக்கலாம்!

"ஹேப்பி பர்த் டே"

சிரித்துக் கொண்டே கையிலிருந்த மலர்க் கொத்தை நீட்டினான் விக்னேஷ். தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்த வசந்திக்கு ஆச்சரியம் ஒரு கண்ணிலும், வெட்கம் மறு கண்ணிலும் வழிந்தது. சூரியன் கூட இன்னும் முழுசாய் விழித்திருக்கவில்லை.
"தேங்க்யூ .."“அப்போ, இன்னியோட உங்களுக்கு பதினாறு வயசு முடிஞ்சிடுச்சா ?" விக்னேஷ் வசீகரமாய்ச் சிரித்தான்.
"ஹே... இருபத்து நாலு ஆகுதுப்பா.... வாழ்த்துக்கள் வாங்கும்போ சந்தோசமா இருக்கு, ஆனா வயசாகுதேன்னு கவலையாவும் இருக்கு" வசந்தியும் சிரித்தாள்.
"டுவண்டி ஃபோர் !!! வாவ்.. என்னால நம்பவே முடியல.. ஓ.கே..ஓ.கே... இன்னிக்கு ஈவ்னிங் டின்னர் என்னோட செலவு... மறுக்கக் கூடாது.. ஓகே... ?"
சொல்லி விட்டு பதிலைக் கூட எதிர்பாராமல் சட சடவென்று காரில் ஏறிப் போய் விட்டான் விக்னேஷ்.
விக்னேஷ் வசந்தியோடு வேலை பார்ப்பவன். கடந்த ஒரு ஆண்டாக இருவருக்கும் நல்ல பழக்கம் உண்டு. வசந்திக்கு விக்னேஷைரொம்பப் பிடிக்கும். ரொம்பவே கண்ணியமாய் நடந்து கொள்வான். என்ன தேவையென்றாலும் வந்து உதவுவான். அறிவுரைகள் சொல்வான். போதாக்குறைக்கு அவ்வப்போது அவளை சில்லென மாற்றும் ஐஸ் கட்டிகளையும் வைத்துப் போவான் !
அதிகாலையிலேயே உற்சாகம் வந்து தொற்றிக் கொண்டது வசந்திக்கு. புத்தம் புதிய ஆடையை உடுத்திக் கொண்டு அலுவலகம் சென்றாள். எல்லோரிடமும் வாழ்த்துக்களை வாங்கி வாங்கி அவளுடைய பொழுது ரொம்ப சுவாரஸ்யமாகக் கழிந்தது. மாலை நேரம் !
"போலாமா ?" கார் சாவியைக் கையில் வைத்து சுழற்றிக் கொண்டே கேட்டான் விக்னேஷ்.
"எங்கே ?" வசந்தி விளையாடினாள்.
"எங்கேயா ?.... ஹேய்... காலைலயே சொன்னேன்.. டின்னர் எல்லாமே ரெடி.. கமான்..." விக்னேஷ் குரலில் இருந்த கெஞ்சலை ரசித்துக் கொண்டே வசந்தி சொன்னாள்,
"சரி..சரி.. நான் ரெடி... பட்... கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்குப் போகணும் ஓகேவா ?" "யா..."
இருவரும் காரில் கிளம்பினார்கள்.

கார் நேராக விக்னேஷின் வீட்டு வாசலில் வந்து நின்றது. "என்ன.. உங்க வீட்டுக்கு வரீங்க ? ஹோட்டல் போவோம்ன்னு நினைச்சேன்... "
"ஸ்பெஷல் டின்னரெல்லாம் ஹோட்டல்ல குடுக்க முடியுமா என்ன ? நானே ஸ்பெஷலா பண்ணியிருக்கேன் வாங்க..."
விக்னேஷின் வித்தியாசமான அணுகுமுறை வசந்திக்குச் சிலிர்ப்பாய் இருந்தது.
மிக அழகான வீடு. வெகு சுத்தமாக இருந்தது. ஒரு பேச்சிலர் தங்கும் வீடு என்பதை சத்தியம் செய்தால் கூட நம்ப முடியாது ! "ஒருவேளை நான் வருவேன் என்று சொன்னதால் எல்லாவற்றையும் சுத்தமாய் வைத்திருக்கிறானோ ?" வசந்தியின் மனதில் கேள்விகள் ஓடின.

விக்னேஷ் வசந்தியை அழைத்துக் கொண்டு டைனிங் டேபிள் சென்றான்."வாவ் !!! .."

வசந்தி விழிகளை விரித்து ஆச்சரியப் பட்டாள்.
டேபிளின் நடுவே ஒரு கேக்.
அருகே இரண்டு மெழுகுவர்த் திகள்.
சுற்றிலும் உணவு வகைகள் மூடப்பட்ட பாத்திரங்களில்.

"என்ன விக்னேஷ்.. கலக்கறீங்க. என் லைஃப்ல நான் இப்படி ஒரு டிரீட் வாங்கினதே இல்லை" வசந்தி நெகிழ்ந்தாள். "நானும் இப்படி ஒரு டிரீட்டை யாருக்கும் குடுத்ததில்லை. இதான் முதல் தடவை"
டின்னர் சாப்பாடு ரொம்பவே மகிழ்வாய் சென்று கொண்டிருந்தது. விக்னேஷ் ஒரு கப்பில் கொஞ்சமாய் வைன் ஊற்றி வசந்தியிடம் நீட்டினான். "என்னது இது ?

""இது ஷேர்டோனே..." "நான் பெயரைக் கேக்கலை... இது வைனா ?"
"ஏன் வைன்னு சொல்றீங்க, பதப்படுத்தப்பட்ட திராட்சைப் பழரசம் ன்னு தமிழ்ல்ல சொல்லுங்க"
விக்னேஷ் சிரித்துக் கொண்டே வசந்தியின் கைகளில் அதைத் திணித்தான். "இது டாஸ்மாக் சரக்கு கிடையாதுங்க, உடம்புக்கு ரொம்ப நல்லது !"
வசந்தி தயக்கத்துடன் வாங்கி அருந்தினாள். கொஞ்ச நேரத்தில் ஒரு வித மயக்க நிலைக்குப் போனாள்.
"விக்னேஷ்.... வாட்ஸ் ஹே...ப்பனிங்யா.... " வசந்தியின் குரல் குழறியது.
விக்னேஷ் இதற்காகவே காத்திருந்தவன் போல அவளைக் கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு அருகில் இருந்த படுக்கையறைக்குப் போனான். ஒரு வெறிப் புன்னகை அவனுடைய இதழ்களில் கோரமாய் உறைந்தது !
மறு நாள் காலையில் விக்னேஷின் படுக்கை யறையில் கண் விழித்த வசந்திக்கு படு பயங்கர ஷாக்.... என்ன நடந்தது என்பது கொஞ்சம் கொஞ்சமாய் புரிய ஆரம்பித்தது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

**Nirubagini Magendiran LL.M.**
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

**திருக்கணித ஜோதிடம்**
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

**GAAYATREE PARTY SERVICE**
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.
e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck
Stuttgart



Gaayatree Party Service

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## பெண்களை விருந்துக்கு அழைத்து ....பின்!

5ம் பக்கத் தொடர்ச்சி...



விக்னேஷ் எதுவும் தெரியாதது போல ஹாலில் அமர்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்தான்.
“விக்னேஷ்.. நேற்று என்ன ஆச்சு ?” வசந்தியின் குரலில் பதட்டம். “நத்திங்... வைன் குடிச்சே... தூக்கம் வருதுன்னு சொன்னே... பெட்ல படுக்க வெச்சேன்.. தட்ஸ் ஆல்” விக்னேஷ் சொன்னான்.

“பொய் சொல்லாதே விக்னேஷ்.. எனக்குத் தெரியும்... வாட் ஹேப்பண்ட் ?”
“நான் ஏதும் பண்ணல, நீதான் என்னைக் கம்பல் பண்ணி....” வின்கேஷ் சொல்லிவிட்டு டீவியில் பார்வையை ஓட்டினான்...
வசந்தி உடைந்து போய் உட்கார்ந்தாள்.சில நாட்களுக்குப் பின், நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் தனது தோழியிடன் கண்ணீருடன் பேசிக்கொண்டிருக்கையில் தான் அவளுக்கு “டேட் ரேப்” எனும் விஷயமே தெரிய வந்தது.

அதென்ன டேட் ரேப் ? மயக்க நிலையில் பாலியல் வன்முறை செய்வதைத் தான் **“டேட் ரேப்”** என்கிறார்கள்.
தெரிந்த பெண்களை வசீகரமாய்ப் பேசி ஹோட்டலுக்கோ, தனிமையான இடங்களுக்கோ அழைத்துச் செல்ல வேண்டியது. அவர்கள் குடிக்கும் பானத்தில் டேட் ரேப் ஸ்பெஷல் மருந்தைக் கலக்க வேண்டியது. அவர்கள் மயங்கிச் சாயும் நேரத்தில் அவர்களை பலாத்காரம் செய்ய வேண்டியது. இது தான் டேட் ரேப்பின் அடிப்படை.

மது அருந்தும் பெண்களென்றால் ஆண்களுக்கு வேலை சுலபமாகி விடுகிறது. பெண்களைக் கட்டாயப்படுத்தியோ, வசீகரமாய்ப் பேசியோ அதிகம் மதுவை அருந்த வைத்து அவர்களை மயக்க நிலைக்குக் கொண்டு சென்று தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி விடுவார்கள்.

இதிலுள்ள சிக்கல் என்னவென்றால், என்ன நடந்தது என்பது மறு நாள் பாதிக்கப் பட்ட பெண்களுக்கு எதுவும் நினைவில் இருக்காது. “நீதான் என்னைக் கட்டாயப்படுத்தி உறவு கொள்ளச் சொன்னே !” என ஆண் குற்றம் சாட்டினால் மறுத்துப் பேசவும் முடியாது. “ஒருவேளை அப்படி இருந்திருக்கலாமோ ? “ என்று தான் நினைக்கத் தோன்றும்.

“என்னால தான் இப்படியெல்லாம் நடந்திருக்கு. இது என்னோட தப்பு... இதுல பேச என்ன இருக்கு” என அமைதியுடனும், வலியுடனும் பெண்கள் முடங்கிவிடுவார்கள். !
பதினேழு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் தான் இதில் ரொம்பவே பாதிக்கப்படுகிறார்கள் என்கிறது இங்கிலாந்தில் வெளியான ஆய்வு முடிவு ஒன்று. பெரும்பாலான டேட் ரேப்கள், காதலன், பழைய காதலன், நண்பன், உடன் வேலை செய்பவர், கொஞ்சம் அறிமுகமானவர் இப்படிப் பட்டவர்களால் தான் நடக்கிறதாம்.
“அவளோட ஆடையே ரொம்ப செக்ஸியா இருந்துச்சு, என்னை வா, வா ன்னு வலியக் கூப்பிடுவது போல இருந்தது” என்பன போன்ற சால்ஜாப்புகள் அடிக்கடி ஆண்களிடமிருந்து எழும். ஒருவருடைய விருப்பம் இல்லாமலும், முழு உணர்வு இல்லாமலும் நடக்கும் எந்த உறவும் பலாத்காரம் தான். செக்ஸி ஆடை அணிவது அவரவர் விருப்பம். அது பாலியலுக்கான அழைப்பு என ஆண்கள் தவறாக அர்த்தம் கற்பிப்பது அவர்களுடைய அறியாமை மட்டுமே.

டேட் ரேப் குற்றத்தில் பயன்படும் எக்கச் சக்க மாத்திரைகள் உள்ளன. இந்த மாத்திரைகளில் சுவையோ, மணமோ, நிறமோ எதுவும் இருக்காது. ஆனால் வீரியமாய்ச் செயல்படும். அத்தகைய மருந்துகளில் மிக மிக முக்கியமானவை இவை.

ரோஹினால், ஃபுலண்ட்ரீஸிபம் எனும் வகையைச் சேர்ந்த மருந்து இது. அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இந்த மருந்து இங்கிலாந்து, மெக்ஸிகோ போன்ற நாடுகளில் தாராளமாய்க் கிடைக்கிறது. இன்னொரு மருந்து ஜி.ஹை.பி என சுருக்கமாய் அழைக்கப்படும் காமா ஹைட்ராக்ஸி பட்ரிக் அமிலம் கலந்த மருந்துகள். மூன்றாவது ஜி பி எல் என அழைக்கப்படும் காமா புடிரெலக்டோன் !

இந்த மருந்துகள் பல வடிவங்களில், பல பெயர்களில் இந்தியாவில் வெகு சாதாரணமாகக் கிடைக்கின்றன என்பது திகிலூட்டும் உண்மையாகும். மாத்திரைகளைப் போலவே எக்ஸ்டஸி போன்ற சில பானங்களும் உள்ளன. இவையும் குடித்தால் குடிப்பவரை அப்படியே அலேக்காக மயக்க நிலைக்குக் கொண்டு செல்லும்.

மயக்கத்துடன் கொஞ்சம் செக்ஸ் உணர்வையும் இந்த மருந்துகள் தூண்டி விடுகின்றன. அதனால் மதுவிலோ, குளிர்பானத்திலோ, ஏன் தண்ணீரிலோ கூட இதைக் கலந்து கொடுத்தால் விஷயம் முடிந்து விட்டது !.

குடிப்பவருக்கு முடிவெடுக்கும் திறமை முழுமையாய் போய் விடும். ஒருவித பரவச மயக்கத் துக்குள் செல்வார்கள். எதிராளியின் விருப்பத் துக்கு ஏற்ப வளைந்து கொடுப்பதும், ஒத்துழைப் பதும் ஒரு அடிமை நிலையில் நடந்தேறும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்




**விமானம் எழுந்து பறப்பதைவிட இது வியப்பானது**
**உழைப்போ மதிப்பானது மட்டுநகரில் ஒரு கிராமம்**

## 31 வது நாள் நினைவு அஞ்சலி

**அமரர் வல்லிபுரம் பத்தி(லக்ஷிமி)**



**தோற்றம் 01.01.1926 மறைவு 18.09.2014**

போயிட்டி நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு செல்வபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் பத்தி (லக்ஷிமி) அவர்கள் அமரர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு, சின்னம்மா, மற்றும் யோமனியில் வசிக்கும் திரு.பாலசிங்கம் திரு.இரத்தினசிங்கம் (சிங்கம்) திரு.வயிரவநாதன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இலங்கையில் வசிக்கும் திருமதி தங்கரத்தினம் திரு.செல்வரத்தினம், திருமதி மகாதேவி யோ்மனி - இந்திராணி, சற்குணவதி அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

*அம்மா என்று நாம் அழைத்து மகிழ*
*வையகத்தில் நமக்கு யார் இனி*
*சும்மா அல்ல உயிர் சுமந்து வளர்த்தாய்*
*கையளவு இதயத்தில் முழுநினைவும் தாயே!*

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிராத்தனைசெய்யும் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர் நண்பா்கள் **தகவல்: திரு.வ.இரத்தினசிங்கம்** (சிங்கம்)
Germany- Werl **0176 306 80 896 - 02922 910 134**
பேரப்பிள்ளை பிரேமா (இலங்கை) **0094 77 32 88 570**




**Gopara Gnanam**
**Textiles & Jewellery Shop**
**தீபாவளியை முன்னிட்டு** (22.10.2014 வரை)
திருமணக் கூறைச்சேலை வாங்குபவா்களுக்கு 100 கேக் பெட்டிகள் இலவசம் **(Cake box)**
வாழ்க்கையாா்கள்
அனைவர்களுக்கும்
எங்கள் இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்!
Tel: 0231/5450028 Mob:01713306542
Rheinische Str. 81- 44137 Dortmund

யாழ்ப்பாணத்தில் வெற்றிமணி
கடந்த பத்து ஆண்டுகளாக
மாணவர் இதழாக இலவசமாக
வெளிவருகின்றது.
தாயகத்து மாணவர்களது
கட்டுரைகள் சாதனைகள்
இடம்பெற்று வருகின்றன.
இப்பணி சிறப்புற தாயகத்தில்
வெளிவரும் வெற்றிமணிக்கு
நீங்களும் உதவலாம்
தாயகத்தில் மாணவர் இதழாக
வெற்றிமணி



# பெண்களை விருந்துக்கு அழைத்து ....பின்!

6ம் பக்கத் தொடர்ச்சி...



பெரும்பாலும் இத்தகைய மருந்துகள் பார்களிலும், இரவு விடுதிகளிலும் எக்கச் சக்கமாய்ப் புழங்குகின்றன என்கிறது காவல் துறை.

இந்த மருந்தின் வீரியம் உடலில் இருந்தாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. சிறு நீர்ப்பரி சோதனை, இரத்தப் பரிசோதனை இவையெல்லாம் கூட இத்தகைய போதை உடலில் இருப்பதைக் காட்டிக் கொடுக்காது. எழுபத்து இரண்டு மணி நேரத்துக்குப் பிறகே உடல் இதன் பாதிப்பிலிருந்து முழுமையான விடுதலையைப் பெறும் ! அளவுக்கு அதிகமாகக் கொடுத்தால் உயிரே போய்விடும் எனும் அதிக பட்ச ஆபத்தும் இத்தகைய மருந்துகளில் உண்டு.

இத்தகைய மருந்துகளைத் தான் ரயிலில் பயணிகளுக்கு பிஸ்கட்டில் கலந்து கொடுத்து பொருட்களை லவட்டிக் கொண்டு போகிறார்கள்" என்கின்றனர் இந்திய காவல் துறை அதிகாரிகள்.

உலகெங்கும் சமீபகாலமாக இந்த டேட் ரேப் மருந்துகளின் விற்பனை பல மடங்கு அதிகரித் துள்ளன என ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் கவலை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் மட்டும் கடந்த ஆண்டு சுமார் எழுபது இலட்சம் பேர் இத்தகைய மருந்துகளை சட்ட விரோதமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.-

இத்தகைய மருந்துகள் மருத்துவத் துறைக்கு மிக மிக முக்கியமானவை. பல நோய்களுக்கும் அறுவை சிகிச்சைக்கும் இவை தேவை என்பதால் இதைத் தயாரிக்காமல் இருக்க முடியாது. அதனால் உலக நாடுகளெல்லாம் ஒன்றிணைந்து இந்த டேட் ரேப் மாத்திரைகளின் பயன்பாட்டுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என ஐ.நா விண்ணப்பம் வைத்துள்ளது.

## வருமுன் காப்பது தான் டேட் ரேப் விஷயத்தில் ஒரே வழி !

பலாத்காரம் செய்பவர் சினிமாவில் வரும் வில்லனைப் போல பரட்டைத் தலை, குளிக்காத உடலுடன் வருவார் என நினைக்காதீர்கள். ரொம்ப டீசண்டான பார்ட்டியாக இருப்பார்.

80 முதல் 90 விழுக்காடு டேட் ரேப்கள் மிகவும் தெரிந்த நபர்களால், அவர்களுடைய அல்லது பெண்களின் வீடுகளில் வைத்தே நடக்கின்றன. எனவே தெரிந்த ஆள் தானே என அசால்ட்டாக இருக்க வேண்டாம். பாதி குடித்த மதுவையோ, குளிர் பானத்தையோ வைத்து விட்டு தூரமாய் போகாதீர்கள். குறிப்பாக பாத்ரூம் போகும் நேரத்தில் கூட யாராவது ஒரு சின்ன மாத்திரை போட்டு உங்களை வீழ்த்தி விடலாம் ! எனவே எச்சரிக்கை தேவை.

இத்தகைய இடங்களுக்கு நண்பர்களுடன் சேர்ந்து ஒரு குழுவாகச் செல்லுங்கள். ஒருவரை ஒருவர் கண்காணித்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு முழு நம்பிக்கை இல்லாத இடங்களுக்குப் போகாதீர்கள். பொதுவாக இரவு விடுதி, நடன அரங்கு போன்ற இடங்களுக்கு சரியான பாதுகாவலோ, தோழியரோ இல்லாமல் போகவே போகாதீர்கள்.

பார்களுக்கோ, மது அருந்தும் இடங்களுக்கோ சென்றால், மதுவையே தொடாத ஒரு நண்பரையும் கூடவே கூட்டிப் போங்கள்.

எப்போதும் அலர்ட்டாக இருங்கள். ஏதேனும் தவறு நடக்கலாம் என உள்ளுணர்வு எச்சரித்தால் தாமதிக்காமல் வெளியேறிவிடுங்கள்.

ரொம்ப அன்பான பெண்கள் பாதிக்கப்பட மாட்டார்கள், அல்லது ரொம்ப அமைதியான பெண்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்றெல்லாம் வீண் கற்பனை வளர்க்க வேண்டாம். பாதிப்பு யாருக்கு வேண்டுமானாலும் நேரிடலாம். எப்போது வேண்டுமானாலும் நேரிடலாம்.

தெரியாத நபர் உங்களுக்கு ஏதேனும் பானத்தை வலியத் தந்தால் வேண்டாம் என நேரடியாகவே மறுத்து விடுங்கள்.

இணையத்தின் மூலம் கண்டெடுத்த நண்பர்களுடன் தனியே சந்திப்பதைத் தவிருங்கள். குறிப்பாக அவர்களுடன் மதுவெல்லாம் அருந்தவே அருந்தாதீர்கள். ஆண்களுடன் தனியே இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால், பாலியல் சார்ந்த உரையாடல் களை தவிர்த்து விடுங்கள். போதை விஷயங்களையும் தொடாதீர்கள்.

உங்கள் டின்னருக்காக ஆண் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், செலவு செய்தாலும் அதற்காக பாலியல் பரிகாரம் செய்ய வேண்டியதே இல்லை. எந்த நிலையிலும் உங்கள் உறுதியில் இருந்து சறுக்காதீர்கள். கொஞ்சம் இடம் கொடுத்தால் சிக்கல் பெரிதாகும் என்பது உறுதி.

ஒரு வேளை நீங்கள் பாதிக்கப்பட்டால் முதலில் உங்கள் குற்ற உணர்விலிருந்து வெளியே வாருங்கள். "ஐயோ என்னால் தான் இப்படி நடந்தது...", " நான் இப்படி செய்திருக்கக் கூடாது", " நான் நோ சொல்லியிருக்கணும்..." , "நான் சொல்றதை இனிமே யாரும் நம்ப மாட்டாங்க", "என்னை ரொம்ப மோசமான பொண் ணுன்னு நினைப்பாங்க" என்றெல்லாம் புலம்பா தீர்கள். தைரியமாகக் காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள்.

விழிப்பாய் இருந்தால், விழாமல் இருக்கலாம்.
நன்றி. Pennae Nee

3ம் பக்கத் தொடர்ச்சி....

# சீனாவின் இலங்கை

### மொத்தத்தேசிய உற்பத்தி வருமானம்!

ஆனால் மொத்தத்தேசிய உற்பத்தி வருமனமும் அந்த வருமானத்தை கொண்டு சாதாரண கிராம மக்களின் வாழ்வில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் குறித்த விபரங்கள் சரியான வையாக இல்லை. மொத்தத்தேசிய உற்பத்தி ஒவ்வொரு கிராமங்களிலும் சரியாக கணிப்பிடப் படுவதில்லை என ஐக்கியதேசிய கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்கா பாராளுமன்றத் தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கூறியிருந்தார். ஆகவே கிராமப்புற மக்களின் வாழ்வை மேற்படுத்தக்கூடிய அபிவிருத்தி திட்டங்கள் இல்லை என்பது வெளிநாட்டு கடன்கள் மூலமான வருமானத்தை கொண்டே மொத்தத்தேசிய உற்பத்தியும் கணிக்கப்படுகின்றது என்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் சீனாவின் உதவியுடன் கொழும்பு துறை முகத்திற்கும் காலி முகத்திடலுக்கு அருகில் உள்ள கடலில் சுமார் 233 ஏக்கர் கடற்பரப்பை நிரப்பி கொழும்பு துறைமுக நகரம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைத் திட்டங்கள் சீனா ஜனாதிபதி ஷி ஜின்பிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோர் கடந்த புதன்கிழமை ஆரம்பித்துவைத்தனர்.

இத் திட்டத்திற்கு சுமார் 1337 அமெரிக்க மில்லியன் டொலரில் செலவாகும் எனவும் சீன அரசின் உதவியுடன் இத் திட்டம் மேற்கொள்ளப் படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு ஐந்து நட்சத்திர ஹேட்டேல்கள், வர்த்தக நிலையங்கள், தொடர்மாடி வீடுகள், விளையாட்டு மைதா னங்கள், பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கப் படவுள்ளன.

1337 அமெரிக்க மில்லியன் டொலரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்தி திட்டத்தில் சாதாரண கிராமப்புற மக்கள் அடையப் போகும் நன்மை என்ன? உயர்குடி வர்க்கத்தையும் அரசியல் செல்வாக்குள்ளவர் களையும் மையப்படுத்தியதாகவே அபிவிருத்தி திட்டங்கள் கூடுதலாக அமைக்கின்றன. கிராமப்புறங்களில் வீதி அபிவிருத்திகள், சுயதொழில் வாய்ப்புகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டுகின்றன. ஆனால் உயர்குடி மக்களையும் அரசியல் செல்வாக்குள்ள வர்த்தகர்களையும் மையப்படுத்தி செய்யப்படும் அபிவிருத்தியின் அளவு கிராமப்புறங்களில் இல்லை.

**பாராளுமன்றத்தில் கூறியது.**

சீன உட்பட மேற்குலநாடுகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகள், உலக வங்கிகள் வழங்கும் உதவிகள் கிராமப்புற மக்கக்குரியது என்று அமைச்சர் சரத்அமுனுகம கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி சட்டமூலம் தொடர்பான ஒழுங்கு விதிகள் பற்றிய பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றியபோது கூறியிருந்தார். ஆனால் வெளிநாட்டு உதவிகளில் சுமார் 70 சதவீதமானவை உயர்குடி மக்களையும் அரசியல் செல்வாக்குள்ளவர்களையும் மையப் படுத்தியதாக உள்ளது என ஹர்ஷா டி சில்வா அந்த விவாதத்தின்போது சொல்லியிருந்தார்.


Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்




தினமும் நான்கு
கோப்பை காபி அருந்தும்
பெண்களுக்கு குழந்தை பிறக்கும் வாய்ப்பு 25 விழுக்காடு குறைகிறது எனும் அதிர்ச்சியூட்டும் ஆய்வு ஒன்றை டச் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். காபியிலுள்ள கா.ஃ.பைன் எனும் நச்சுப் பொருளே இதன் காரணம் என்பதைத் தனியே சொல்லத் தேவையில்லை.
கா.ஃ.பைன் என்பது கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் கலந்த ஒரு ரசாயனப் பொருள் ஆகும். இது உடலுக்கு சுறுசுறுப்பைத் தருகிறது, ஆனால் கூடவே இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்து குருதி அழுத்தத்தையும் அதிகரிக்கிறது. இவை உடலின் சமநிலையை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.

தினமும் நான்கு கோப்பை காபி அருந்துவதும், வாரம் மூன்று கப் மது அருந்துவதும் கருவுறுதல் சிக்கலில் ஒரே அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என அறிவித்து காபி பிரியர்களின் மனதில் கிலியை ஏற்படுத்தியுள்ளது இந்த புதிய ஆராய்ச்சி.

காபியில் உள்ள கா.ஃ.ப்பைன் பெண்களின் முட்டையை வலுவிழக்கச் செய்கிறது எனவும், அந்த நச்சுத் தன்மையின் பாதிப்பின் விளைவாக குழந்தையில்லா நிலை கூட ஏற்படலாம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

குழந்தையின்மைக்குக் காரணமாக மருத்துவர்கள் பட்டியலிடும் புகைத்தல், மது அருந்துதல், அதிக உடல் எடை என்னும் அதி முக்கிய மூன்று காரணிகளுடன் இப்போது கா.ஃ.பைன் எனும் விஷப் பொருளும் இணைந்துள்ளது.
கருவுறுதலில் மட்டுமல்ல, தாய்மை நிலையிலிருக்கும் பெண்கள் காபி குடித்தால் அந்த நச்சுத் தன்மை கருவில் இருக்கும் குழந்தையைக் கூட சென்று தாக்குமாம்.

காபி குடித்துக் கொண்டே தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட சிகரெட்கள் புகைக்கும் பெண்கள், வாரம் தோறும் மூன்று கப் மதுவும் அருந்தினால் அவர்களுக்கு இயற்கையாக குழந்தை பிறக்கும் வாய்ப்பு வெறும் 5 விழுக்காடு தானாம்.

தாய்மையடைவதைத் தடுக்கும் காரணிகளில் புகை பிடித்தல் முதலிடம் பிடிக்கிறது. புகைப்பது குழந்தையின்மைக்கு முக்கிய காரணம், அதன் பிறகு மதுவும், அதிக எடையும், காபியும் வருகின்றன.
கா.ஃ.பைனினால் நிகழும் விளைவுகளைக் குறித்து அடுக்கிக் கொண்டே போகலாம் என்கின்றனர் மருத்துவர்கள். உதாரணமாக, கா.ஃ.பைன் உடலிலுள்ள மெலடோனின் அளவை பாதியாகக் குறைக்கிறது. நிம்மதியான தூக்கத்தைக் கொடுக்கும் இந்த ஹார்மோனின் அளவு குறைவதால், காபி குடித்தால் தூக்கம் குறைகிறது.

காபி அருந்துவதால் வரும் இன்னொரு மிகப்பெரிய சிக்கல் அது எலும்புகளின் வலிமையைக் குறைக்கின்றது என்பதாகும். எலும்புகள் வலுவிழப்பதால் ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற நோய்கள் தாக்கும் வாய்ப்பு பெருமளவு அதிகரிக்கிறது. குறிப்பாக இந்த ஆஸ்டியோபோரோசிஸ் பெண்களை அதிகம் தாக்கும் என்பது கவனிக்கத் தக்கது.
ஒரு சாதாரண நபருடைய லிவர் நூறு மில்லி கா.ஃ.பைனை வெளியேற்ற இருபத்து நான்கு மணி நேரங்கள் எடுத்துக் கொள்கின்றன. நூறு மில்லி கா.ஃ.பைன் என்பது எவ்வளவு ? ஒரு கப் காபியில் சுமார் 75 முதல் 200 மில்லி கா.ஃ.பைன் இருக்கும் என்றால் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

கா.ஃ.பைன் விஷம் பெண்களுக்கு மட்டும் தானா பிரச்சனையைக் கொடுக்கிறது ? கா.ஃ.பைனுக்கு ஏனிந்த ஓரவஞ்சனை என்று நினைப்பவர்களுக்கு ஒரு செய்தி. இது ஆண்களையும் பெண்களையும் சம அளவில் பாதிக்கிறது. குறிப்பாக ஆண்களின் உயிர் அணுக்களைப் பாதித்து அவர்களுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்புகளைக் கூட குறைக்கிறது

காபி குடிக்காமல் என்னால் இருக்கவே முடியாதே ! கொஞ்சம் கூட குடிக்க முடியாதா என அலறும் காபி பிரியர்களை அமைதிப்படுத்த, தினமும் முன்னூறு மில்லிகிராம் காபி என்பது ஆரோக்கியத்துக்கு அதிக ஊறு விளைவிக்காது என்று அறிவிக்கின்றனர் மருத்துவர்கள்.----

## தென் கொறியா நாட்டில் அனைத்து மதங்கள் பங்குபற்றிய சிறப்பு மகாநாட்டில் யேர்மனியில் இருந்து சிவ சிறி பாஸ்கரகுருக்கள் அவர்கள்!






தென் கொறியா நாட்டில் அனைத்து மதங்கள் பங்குபற்றிய விசேட மகாநாட்டில் ஜேர்மன் நாட்டிலிருந்து இந்துமத சார்பாக ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா சிவ சிறி பாஸ்கரகுருக்கள் அவர்கள் விசேட விருந்தினராக அழைக்கப்பட்டு மகாநாட்டில் பங்குபற்றி உலக சமாதனத்திற்காக உரையாற்றி, எமது இந்துசமயத்தின் பெருமையையும் எடுத்துக் கூறியமையும், எமது இந்துசமயத்திற்குக் கிடைத்த சிறப்பாகும். அவரது இந்துசமயப்பணி சிறப்புற அவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவிக் கிறோம்.

Kaneen electronics
15 வது ஆண்டில்..
ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ஆதவன் தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஆதவனில் ஒளிபரப்பவேண்டுமா! எம்மை நாடுங்கள். எமது துல்லியமான ஒளிப்பதி, ஒலிப்பதி உங்கள் நிகழ்ச்சிகளை மெருகூட்டும்.
மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் நாடவும்!
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# பண்டைய எகிப்திய நீதி மன்றங்களில் வெங்காயத்தின் மீது சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ளுமாறு கோரப்பட்டனராம்!



## வெங்காயத்தின் மகத்துவம்!

வெங்காயம் இல்லாமல் இன்று சிற்றுண்டியோ, குழம்பு வகைகளோ, காரப் பலகார வகைகளோ செய்வதைப் பற்றி யோசிக்கவே முடியாது அல்லவா? குழம்புக்கு, மற்ற பலகாரங்களுக்கு மணமூட்டுவதற்காகவும், தாளிக்க வேண்டு மானாலும் வெங்காயத்தின் உதவிதான் தேவை. சிலவகை உணவுக்கு ருசி சேர்ப்பதே வெங் காயம்தான். வெங்காய சாம்பாரின் ருசியறியாத மக்கள் தமிழ்நாட்டில் இருக்க முடியுமா? வெங்காய காரக் குழம்பின் சுவைக்கு நிகர் ஏது?

வெங்காய வடை, வெங்காய தோசை, வெங்காய ரவா தோசை, வெங்காய சட்டினி, தயிர்ப் பச்சடி என பட்டியல் போடத் தொடங்கினால் அந்தப் பட்டியலே ஒரு முழு நூலாகிவிடும். வெங்காயம் வெறும் உணவுப் பண்டமாக மட்டுமின்றி அற்புதமான மருத்துவ ஆற்றல் படைத்த ஒரு பண்டமாகவும் இருக்கிறது என்ற உண்மையை மிகவும் தொன்மைக் காலத்திலேயே நமது நாட்டு மக்கள் அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. வெங்காயத்தின் தாயகம் தமிழகமோ அல்லது பாரத நாட்டின் பிற மாநிலங்களோ அல்ல. எகிப்து நாடு. உலகிலேயே முதன் முதலாக எகிப்து நாட்டு மக்கள்தான் வெங்காயத்தைச் சரியாகவும், அதிகமாகவும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

எகிப்திய மக்கள் அந்நாளில் வெங்காயத்தை தெய்வீக அம்சம் பொருந்தியதாகக் கருதி வந்துள்ளனர். பக்தி பூர்வமாகச் செய்யப்படும் பெரிய பூஜைகளின்போது வெங்காயமும், வெள் ளைப் பூண்டும் பூசனைக்குரிய மூர்த்திகள் போன்ற மதிப்புடன் மரியாதையுடன் பூஜையில் இடம் பெறுவது வழக்கமாம். பண்டைய எகிப்திய நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப் படும்போது வாதியும், பிரதிவாதியும் வெங்காய த்தின் மீது சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள் ளுமாறு கோரப்பட்டனராம். அத்தனை உயர்ந்த இடம் அதற்குத் தரப்பட்டிருந்தது.

### பச்சையாகவே வெங்காயம் சாப்பிடுங்கள்...

வெங்காயத்தில் வைட்டமின் சி சத்து மிகவும் அதிகமாக உண்டு. குறிப்பாக பச்சை வெங்காயத்தில் சி சத்து அதிகமாக உண்டு.



பெரும்பாலும் வெங்காயத்தை பச்சையாக உண்ணுவதன் மூலமே அதிலுள்ள சத்துக்களை முழுமையாகப் பெற முடியும். பச்சை வெங்காயத்திலுள்ள கந்தக சத்து சிலருக்கு ஒத்து வராது. அப்படிப்பட்டவர்கள் பிஞ்சு வெங்காயமாகப் பார்த்துச் சாப்பிடலாம். முற்றின வெங்காயமாக இருந்தால் வேக வைத்துச் சாப்பிடலாம்.

### உடல் பருமனைக் குறைக்க:

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து மிக மிகக் குறைவு. அதனால் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ள விரும்புவோர் உணவில் வெங்காயத்தைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.ரத்த விருத்திக்கும் இரத்த சுத்தத்திற்கும் வெங்காயம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அதனால் உடல் தேஜஸ் ஏற்பட்டு அழகாகிறது. உணவோடு வெங்காயத்தைச் சேர்த்துக் கொள்ளும்போது அந்த உணவு வெகு எளிதில் ஜீரணமாக வெங்காயம் உதவுகிறது.

### உஷ்ணக் கடுப்பு அகல:

பல்வேறு காரணங்களால் உஷ்ணம் அதிகரிக்கும்போது வெங்காயம் உடல் உஷ்ணத் தைச் சமனப்படுத்துகிறது. நாடித் துடிப்பைச் சீராக வைத்திருக்க உதவும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு.

### சாதாரண தலைவலிக்கு:

சாதாரணமாக தலைவலிக்கு வெங்காயத்தை நசுக்கி முகர்ந்தால் உடன் குணம் தெரியும்.

### விசக் கடிக்கு

வெங்காயத்தைப் பாதியாக நறுக்கி தேள், குளவி போன்ற விச ஜந்துக்கள் கடித்த இடத்தில் அழுந்தத் தேய்த்தால் வலி குறையும்.

### இருமலுக்கு:

பொதுவான இருமலுக்கு வெங்காயச் சாற்றை மோருடன் கலந்து குடிக்க குணமாகும். முதுமைப் பருவத்தில் தோன்றுகிற கடுமையான இருமலுக்கு வெங்காயத்தை வதக்கி வெல்லம் கலந்து சாப்பிட குணம் தெரியும்.

### மூளையின் சக்தி பெருகும்:

மூளையின் ஆற்றலை வலுப்படுத்தும் சக்தி வெங்காயத்துக்கு இருக்கிறது. அது நல்ல உடல் தேற்றும் டானிக்காகவும் திகழ்கிறது. ஆகவே தினமும் வெங்காயத்தை சூப்பாகச் செய்து அடிக்கடி சாப்பிடலாம். இரவு உறங்கப் போவதற்கு முன்பு ஒரு கோப்பை வெங்காய சூப் சாப்பிடுவது மிகவும் நல்லது. வெங்காயத்தை வேக வைத்து தேன், கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம்.

### பல்வலி, ஈறு வலி:

பற்களில் குறிப்பாக ஈறு பகுதிகளில் வீக்கம் கண்டு சீழ் வடிவதுண்டு. அப்போது வலியும் எரிச்சலும் கடுமையாக இருக்கும். அந்தக் குறைபாட்டை அகற்ற பதமான சுடுநீரில் தாராளமாக வெங்காயச் சாற்றைக் கலக்கி வாய் கொப்பளிக்க வேண்டும்.பிறகு வெங்காயச் சாற்றை கொஞ்சம் பஞ்சில் நனைத்து பாதிக்கப்பட்ட பற்களில் நன்றாகத் தடவி விட வேண்டும்.

### உடல் அயர்வும் வலியும் நீங்க:

அரைக் கீரையுடன் பூண்டும், மிளகும் தக்க அளவு சேர்த்து குழம்பு வைத்து இரவு நேரத்தில் சாப்பிட உடலில் தோன்றும் அயர்வும், வலியும் நீங்கி உடல் இலேசாகவும் சுகமாகவும் ஆகிவிடும்.

### குடல் புழுக்கள் நீங்க:

குழந்தைகளில் குடலில் புழுக்கள் உற்பத்தி யானால் எப்போது வயிறு மந்தம், பசியற்ற நிலை, வந்து எவ்வளவு உணவு உட்கொண்டாலும், குழந்தைகள் நாளுக்கு நாள் பலவீனமடையும். இதற்கு தோல் நீக்கப்பட்ட வெள்ளைப் பூண்டுடன் குப்பை மேனி இலையைச் சேர்த்து நசுக்கி சாறு எடுத்து அதைச் சாற்றை குழந்தைகளுக்கு கொடுக்க மலப் புழுக்கள் வெளிவந்துவிடும்.

### பால் சுரப்புக்கு:

குழந்தைப் பேறுக்குப் பிறகு சில தாய்மார்களுக்கு போதிய அளவு பால் சுரக்காமல் இருந்து விடுவதுண்டு பசுவின் பாலில் இரண்டொரு வெள்ளைப் பூண்டு பற்களைப் போட்டு காய்ச்சி பூண்டை சாப்பிட்டு பாலை குடித்து விட வேண்டும்.






T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# பொத்துவில் பிரதேசத்தின் சிறார்கள் சிந்துநடைக் கூத்துப் போட்டியில் முதலிடம்!





அருகிவரும் கூத்துக்கலையை வளப்படுத்தும் நோக்கில் இலங்கையின் கிழக்கு மாகாண கலை கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நாட்டுக்கூத்துப் போட்டியில் மாகாண மட்டத்தில் ஏழிசைப்பிரியன் ராஜ்குமார் அவர்களின் நெறியாழ்கையில் பொத்துவில் பிரதேசத்தின் சிறார்கள் சிந்துநடைக் கூத்து போட்டியில் முதலிடத்தை வென்றுள்ளனர்.கடந்த யுத்தக் காலகட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொத்துவில் பிரதேசமும் ஒன்றாகும்.மிகவும் பின்தங்கிய தமிழர் வாழும் இப்பகுதியில் நீண்ட தலைமுறை இடைவெளிக்குப் பின்னர் இந்த கூத்துக்கலையை இக்குழு மீளப் புத்துயிரூட்டியள்ளனர்.அத்துடன் வசதியின்மையை காரணமாக்காது கிடைத்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி உடையலங்காரம் மற்றும் பிற தேவைகளை தாமாக நிறைவேற்றி வெற்றியும் கண்டுள்ளனர். திறமைக்கு வறுமை ஒரு தடையல்ல என நிரூபித்து காட்டியுள்ளனர்.வெற்றி பெற்ற கலைஞர்களுக்கும் நெறிப் படுத்திய ராஜ்குமார் அவர்களுக்கும் வெற்றிமணியின் வாழ்த்துக்கள். மேற்படி சிந்துநடைக்கூத்து நிகழ்வில் கலைஞர்கள் திரு மௌனகுரு திரு ராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



## நேர்வே நாட்டில்....பிறமொழிபேசும் பிறநாட்டவர் நடித்த நாட்டுக்கூத்து

இந்நாடகம் நோர்வேயில் ஒஸ்லோ நுண்கலைக் கல்லூரியின் அழைப்பின் பேரில் 2010இல் சென்று பிரளயனோடு மௌனகுரு அவர்களும் இணைந்து தயாரித்த நாடகம்..இதில் தமிழரல்லாத 10 நாடுகளைச் சேர்ந்த பிற மொழி பேசுவோர் நடித்திருந்தனர்.அவர்களுக்குக் கூத்துத் தாளக்கட்டுக்களையும் ,கூத்தையும் பழக்கியது ஒரு தனி அனுபவம்.. என்கின்றார் திரு.மௌனகுரு அவர்கள்.

பிறநாடுகளைச் சேர்ந்த அவர்களுக்கு எமது கலை பற்றி வாழ்வு முறை பற்றி அறியவேணும் என்கிற ஆர்வமிகுதிதான் காரணம்.அவர்களது நோக்கம் சகல நாட்டு இசையையும் கலைகளையும் ஒன்றிணைத்து பார்ப்பதே.




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## யாழ்ப்பாணத்து நீர்வளத்தைப் பிரமிக்க வைக்கும்

# வழுக்கையாறும், இடிகுண்டுக் கிணறும்

இ.கோபிராஜ் சண்டிலிப்பாய் -வடக்கு


படங்கள்:வெற்றிமணி


படங்கள்:வெற்றிமணி

இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் 16km நீளமான பருவகால ஆறாகும். வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரிவுகள் அதிகம் நன்மை பெற்றாலும் வலிகாமம் மேற்கு அதிக நன்மைகளைப் பெறுகின்றன. இது தெல்லிப்பழையில் ஆரம்பமாகி அளவெட்டி, கந்தரோடை, கட்டுடை, மானிப்பாய் நிலப்பிரதேசம் 49 சதுரமைல் ஆகும். வடிநிலத்தில் பூதன்குளம், பிணக்கைக்குளம், கட்டுவயல்குளம், அம்பனைக்குளம், ஆலம்குளம், ஐயனார்கோயிலடி, நவாலி, அராலி போன்ற பகுதியில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த கதவுகள் அமைக்கப்பட்டன.

வலிகாமம் மேற்கில் குறிப்பாக 325 ஹெக்ரெயரில் இருந்து 480 ஹெக்ரெயர் அதிகரிக்கும். இதில் அராலி நீர் உட்புகுவதை தடுக்கமுடியும். இவ்வடிநிலத்தில் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. வடக்கு மேற்குப் பகுதியில் அதிகம் பெரும்பகுதி பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படாது உள்ளது. இதில் குடியிருப்பு, பொழுது போக்கு மையம், கைத்தொழில் போன்றன அமைத்து பயன்படுத்த முடியும். தரைக்கீழ் நீரில் தங்கியிருக்க வேண்டிய தேவையுண்டு. இதைவிட அராலியில் வழுக்கையாற்று கழிமுகம், பறவைகள் சரணாலயம் விருத்தி செய்யப்பட்டால் அபிவிருத்திக்குப் பயன்பாடாக இருக்கும்.

வழுக்கையாற்று பள்ளத்தாக்குக்கு மேற்குப் புறமாக மாசியப்பிட்டி பொதுச்சந்தைக்கு அருகாமையில் சிவன்கோயில் ஒன்று அழிபாடுகளுடன் காணப்படுகின்றது.

தரைக்கீழ் நீர்வளம் இலங்கையில் பரவலாகக் காணப்படுகிறது. 80 நிலப்பரப்பை உள்ளடக்கியதாக புத்தளத்திலிருந்து வட கிழக்குப் புறமாக கிளிநொச்சியினூடாக முல்லைத்தீவு வரை செல்லும் வரைகோட்டிற்கு வடக்குப் புறமாக யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட்ட பகுதி முழுவதும் உள்ளடங்கும்.

பண்டைய காலத்தில் இவ்வழுக்கை ஆற்றினைப் பயன்படுத்தி உரோம வியாபாரிகள் வியாபாரம் செய்தனர். தற்போதைய உடுவில், மாசியப்பிட்டி சந்தைக்கு இடையே தோணித்துறை ஒன்றினை திரும்புதுறை என்று பரப்பு கொண்டு தற்போதைய உடுவில் குளத்தின் ஒரு முனையை குறிப்பிட்டு நின்றதெனலாம். புதைந்த மரத்தோணியின் பல பாகங்கள் இதற்குச் சான்றாகின்றன.

உரோம வியாபாரிகளது நாணயங்களில் பெருமளவு வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் சிதறியிருப்பது ஆதாரமாகும்.

இடிகுண்டு கிணறு

இது 400 வருடங்கள் பழமையானது என சிலர் தெரிவித்தபோதும் இன்னோர் வகையில் 150 - 140 இற்கு இடைப்பட்ட வருடங்களாகும். ஆரம்பத்தில் 3 - 5 அடிக்கு இடைப்பட்ட ஒரு துவாரமாகக் காணப்பட்டது. இது திடீரென இயற்கையாக உருவாகியது. பின்னர் காலத்துக்குக் காலம் இடிந்துபோய்க்கொண்டு இருப்பதனால் இது இடிகுண்டு என்ற பெயரைப் பெற்றது.

கடந்த 30 வருட சுற்றுவட்ட அளவைவிட தற்சமயம் 2 மடங்காக உயர்ந்தது. 10 வருடங்களுக்கு முன்பு எப்போதும் நீர் வற்றிப் போனதில்லை. ஆனால் இன்று முற்றாக நீர் வற்றுகிறது. ஆனால் அடிப்பகுதி வரண்டு போவதில்லை. இதன் நீர்மட்டம் குறையும்போது அயற்கிராமங்களின் கிணறுகளில் நீர் வற்றிப் போகின்றது. அத்துடன் அயலில் உள்ள வயல் காணிகளிலும் உவர்த்தன்மை அதிகரிக்கிறது.

இது ஓர் புனல் வடிவில் உள்ளது.

இடிகுண்டின் அடியிலிருந்து சீமெந்து கட்டு, கிணறு போன்று செங்குத்தாகவோ "குளம் போன்ற சாய்வாகவோ அமைக்கப்படவேண்டும். விவசாயத்துக்கு வெளியே நீர் இறைக்கும் இயந்திரம் வைத்து நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அமைப்பு அவசியம்.

இடிகுண்டிற்கு வரத்துவரும் வெள்ளம் நீர் நிலை நிரம்பிய பின்பு வெளியேறுவதற்கு வழிசமைக்க வேண்டும். அதற்கு 31/2 அகலமும் 200 அடி நீளமும் வரம்பு இடிகுண்டிலிருந்து வழுக்கியாற்றின் வாய்க்கால் வரை உள்ளது. இது சிறிய வாய்க்காலுடன் கூடிய சீமெந்துக் கட்டாக மாற்றியமைக்க வேண்டும்.

இடிகுண்டிலிருந்து நீர்ப்பாசனத்துக்கான சீமெந்து வாய்க்கால் 300 மீற்றர் நீளத்துக்குத் தேவை. கால்நடைகள் நேரடியாகத் தண்ணீர் பெற சாய்வாக அமைக்கப்படவேண்டும்.

இடிகுண்டின் சேறு அகற்றி சுற்றிவர மண் அணை அமைக்கவேண்டும். இடிகுண்டின் உள்ளே மண் இடிந்து விழுவதால் அதைத் தடுக்க வேண்டும்.

வழுக்கியாற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய எதிர்காலத் திட்டங்கள்

வழுக்காற்றுத் திட்டத்தின் விவசாய அபிவிருத்தி என நோக்கும்போது நீண்டகால நோக்கமாக விவசாய, கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்தி எதிர்கால மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.

குறுங்கால நோக்கமாக கிராமத்து வளங்களை இனங்கண்டு, எதிர்நோக்கும் பிரச்சினையை இனங்கண்டு அதற்கான தீர்வை முன்வைத்தல்.

நீர்வளத்தை மேம்படுத்தல், வழுக்கயைாற்று வாய்க்கால் புனரமைத்தலுடன் விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல்.

சோளச்செய்கை, குரக்கன் செய்கை, நிலக்கடலை, அவரைச் செய்கை போன்றவற்றிற்கு பயிற்சிகளை வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

சூரிய மின்கலத்துடன் இணைந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தலாம்.

பழச்செய்கையை ஊக்கப்படுத்துவதுடன் சந்தைப்படுத்தல் வசதிகளை உருவாக்கி வீட்டுத் தோட்டம், ஒருங்கிணைந்த பண்ணை போன்றவற்றை உருவாக்குதல்.

எமது கையில் இவ் வழுக்கியாறு, இடிகுண்டு கிணறு போன்றன சிறந்த வளங்களாக எமக்கு இருக்கின்றன. இதை நாம் பயன்படுத்தத் தவறியுள்ளோம். இனிவரும் காலத்தில் இதைப் பயன்படுத்தி அபிவிருத்தியில் மேல் நோக்கிச் செல்வோம்.



உங்கள் அனைத்து
இல்லக் கொண்டாட்டங்களுக்கும்
100 இருக்கைகளுடன்
நீங்கள் விரும்பும்
சோடனைகளுடன்

every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

Om Namaste
Indisches Restaurant

உங்கள் விருப்பம்போல் இலங்கை
இந்திய உணவுகளை சுவையாக
தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு
மக்களுக்கும் ஏற்ற வகையில்
பரிமாறக் காத்திருக்கின்றோம்.

all you can eat Buffet
daily from 11.00-22.00
only 6,-€

Offnungszeit: 11.00 -24.00

www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றுண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு
கொள்ளுங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82


அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

தரம் என்பதை தாரக மந்திரமாய்...நியாயமான விலைகளுடன்...

Dortmund மாநகரில்!

# TKS Best Foods

**Asia Afro & Europäische Lebenamittel Einzelhandel**

## பலசரக்கு பொருட்கள் பசுமையான மரக்கறிவகைகள் மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில் என்றும் பெற்றிட நாடுங்கள்

## எங்கள் பற்றுச்சீட்டில் உள்ள எண் உங்களை அதிஸ்டசாலியாக்கலாம்!


**தீபாவளியை முன்னிட்டு 18.10.2014 சனிக்கிழமை முதல் 22.10.2014 புதின்கிழமை வரை எமது நிறுவனத்தில் பொருட்கள் வாங்குபவர்கள் பற்றுச்சீட்டின் இலக்கத்தை (Bill- No) கவனிக்கவும்.**

**உங்களில் பலருக்கு அதிஸ்டம் காத்துள்ளது. அதிஸ்ட எண் ( அதிஸ்டத்திற்குரிய பற்றுச்சீட்டு இலக்கம்) எமது நிறுவனத்தின் பார்வையாளர் பலகையில் போடப்பட்டிருக்கும்.**

**Tel: 0231 950 46 881**
**Fax:0231 950 46 882**

Öffnungzeiten 9:00-20.00
Son & feiertage geschlossen






Rheinische str.79-81 - 44137 Dortmund

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்




# கோமளவள்ளி ஜெயராம் திரையுலகில் ஜெயலலிதாவானார்

கோமளவள்ளி ஜெயராம் என்றால் யாருக்கும் தெரியாது அதே சமயம் ஜெ.ஜெயலலிதா என்றால் இன்றைக்கு உலகம் முழுவதும் பிரபலம். சொத்துக்குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் தண்டனை பெற்று முதல்வர் பதவியையும், எம்.எல்.ஏ பதவியையும் பறிகொடுத்த ஜெயலலிதாதான் இன்றைக்கு உலகம் முழுவதும் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாகிவிட்டார். ஜெயலலிதா சிறைக்குப் போனதால், பிரதமர் மோடியின் அமெரிக்க பயணம் கூட பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஸ்ரீரங்கத்தை பூர்வீகமாகக் கொண்டவர் என்று கூறப்படும் ஜெயலலிதா, கர்நாடக மாநிலத்தில் பெங்களூர்-- மைசூர் நெடுஞ்சாலையில் மாண்டியா மாவட்டத்தில் மேல்கோட்டை என்ற கிராமத்தில் பிறந்தார்.

ஜெயலலிதாவின் சித்தி (தாய் சந்தியாவின் தங்கை), வித்யாவதி ஏற்கனவே சினிமாவில் நடித்து வந்தார். அடுத்து சந்தியாவும் சினிமா நட்சத்திரமானார். ஜெயலலிதாவுக்கு சினிமாவில் விருப்பமில்லை என்றாலும், குடும்ப நிலை காரணமாக திரை உலகில் புகுந்தார்.

வெண்ணிற ஆடை ஜெயலலிதா தொடக்கத்தில் சில கன்னடப்படங்களில் நடித்தாலும், அவர் கதாநாயகியாக நடித்து 1965ம் ஆண்டில் வெளிவந்த டைரக்டர் ஸ்ரீதரின் "வெண்ணிற ஆடை"தான் அவரது முதல் தமிழ்ப்படம்.

ஆயிரத்தில் ஒருவன் வெண்ணிற ஆடை படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போதே பி.ஆர்.பந்துலுவின் "ஆயிரத்தில் ஒருவன்" படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்தார். 2 படங்களும் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றன. எம்.ஜி.ஆருடன் ஜோடி சேர்ந்ததுதான் ஜெயலலிதாவின் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

எம்.ஜி.ஆரின் நாயகி முதல் படத்திலேயே கதாநாயகியாகி, புகழ் ஏணியின் உச்சிக்கு சென்ற ஜெயலலிதா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என்று பல மொழிகளிலும் நடித்தார். இதில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக 28 படங்களில் நடித்துள்ளார்.

அழகு தேவதை ஜெயலலிதாவின் நிறம், அழகு அவருக்கு என்று தனி ரசிகர்களைப் பெற்றுக் கொடுத்தது. சிவாஜிகணேசன், என்.டி.ராமராவ், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் ஆகியோருடன் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார்.

அடிமைப் பெண் அடிமைப் பெண், அரசகட்டளை, ரகசியபோலீஸ், பட்டிக்காடா பட்டணமா, கந்தன் கருணை, யார் நீ, என் அண்ணன், சூர்ய காந்தி ஆகிய படங்களில் ஜெயலலிதாவின் திரை உலகப் பயணத்தின் மைல்கல்.

100 வது படம் ஜெயலலிதாவின் 100 வது படமான "திருமாங்கல்யம்" 1977ல் வெளிவந்தது. அதன்பின் படங்களில் நடிப்பதைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டார்.

16 ஆண்டுகளில் 122 படங்கள் 1960, 70களில் அசைக்க முடியாத நாயகியாக திகழ்ந்த ஜெயலலிதா, சுமார் 16 ஆண்டுகளில் 112 படங்களில் நடித்து முடித்தார். 1980ல் வெளிவந்த "நதியைத்தேடி வந்த கடல்" என்ற திரைப்படம்தான் அவர் நடித்து கடைசியாக வெளிவந்த படம்.

வேதா நிலையம் ஜெயலலிதாவின் தாயார் சந்தியாவின் இயற்பெயர் ஹவேதா". அவரின் நினைவாக தேனாம்பேட்டை போயஸ் தோட்டத்தில் வீடு ஒன்றைக் கட்டிய ஜெயலலிதா, அந்த வீட்டிற்கு "வேதா நிலையம்" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார் ஜெயலலிதா.

அரசியலில் நடிகையாக இருந்த ஜெயலலிதா எம்.ஜி.ஆருடன் நடித்து, அவரின் அன்பிற்கு பாத்திரமாகி அவர் அதிமுகவை தொடங்கிய பின்னர் கட்சியில் இணைந்தார். ராஜ்யசபா எம்.பியானார்.

மூன்று முறை முதல்வர் எம்.ஜி.ஆரின் மறைவிற்குப் பின்னர் எம்.எல்.ஏவாக வெற்றி பெற்று, பின்னர் 1991 ஆம் ஆண்டு முதன் முறையாக முதல்வரான அவர் 2001, 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களி வெற்றி வெற்றி பெற்று மூன்று முறை முதல்வராக வெற்றி பெற்றார்.

ஜெயலலிதாவையே காணோம்... நடிகையின் மகளாக பிறந்து நடிகையாக வாழ்க்கையைத் தொடங்கிய ஜெயலலிதா, கடந்த ஆகஸ்ட் 29ம் தேதி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளராக 7வது முறையாக தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவர் களத்தில் எதிரிகளையே காணோம் என்று பேசினார். ஆனால், சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைக்குப் போனதால், களத்தில் ஜெயலலிதாவையே காணோம் என்கின்றனர் எதிர்கட்சியினர்.
சில கேள்விகளுக்கு பதில் நம்கையில் இல்லை. காலம் தனதாக அதன் பதிலை வைத்திருக்கும்.



வெற்றிமணிக்கு புது விளம்பரங்களை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன் தரவும்!
மாதம்தோறும் முதல் வாரத்தில் வெற்றிமணி வெளிவருகின்றது

# அடுப்படி



## பேரீச்சம் பழ தயிர்க் கேக்



**தேவையான பொருட்கள்**

பேரீச்சம் பழம் 250. கிராம்.
ரவை 250. கிராம் தயிர் 250கிராம்
சீனி 250கிராம் கயூ 75கிராம்,
2 tea bags,
தேசிக்காய்.1
(தேசிக்காய்த் தோல் Scrape பண்ணியது.)
அப்பச்சோடா1/4,தே.க.பேக்கிங் பவுடர் 1/2 ,தே.க

**செய்யும் முறை**

பேரீச்சம் பழத்தை சிறு துண்டுகளாக வெட்டவும் தேயிலையை-1,கப் சுடு தண்ணீரில் ஊற விட்டு அந்த சாயத்தில் பேரீச்சம் பழத்தையும்.அப்பச் சோடாவையும் சேர்த்து 6-8 மணித்தியாலம் ஊற விடவும்.

ஊறிய பின் ஒரு பாத்திரத்தில் பேரீச்சம் பழத்துடன் சீனியையும் சேர்த்து கேக் அடிக்கும் மர அகப்பையால் ஓரளவு சீனி கரையும் வரை கலக்கவும் பின் ரவை. தயிர் இரண்டையும் மாறி மாறிப் போட்டு கலந்து கடைசியாக கயூ,லெமன் தோலையும் சேர்த்து நன்றாக ஒரே சேர்வையாய் கலந்த பின் கேக் பேக் செய்வதுபோல், 45நிமிடம் 180 டிகிரியில் பேக் பண்ணவும். ஒன்ரறை அங்குலத்துக்கு மேல் கலவையை ஊற்ற வேண்டாம் **முக்கிய குறிப்பு:** இந்தக் கேக் அடுத்த நாள் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்

**புவனம் தர்மரட்ணம்**

## பேரீச்சம் பழம் தரும் நன்மைகள்!

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் பழம். பேரீச்சம் பழம். இந்த பழத்தில் ஏராளமான நன்மைகள் உள்ளன.

இரும்புசத்து அதிகம் உள்ள பேரிச்சம் பழம் நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்தது. வைட்டமின் மற்றும் மினரல் நிறைந்த இந்த பழம் நரம்பு தளர்ச்சியை போக்கும். புரதச்சத்து, நார்ச்சத்து, கால்சியம் உள்ளிட்ட சத்துக்கள் நிரம்பியுள்ள பேரிட்சம் பழங்கள் புற்றுநோய் வராமல் தடுக்கும்.

சில பெண்களுக்கு மாதவிலக்கின்போது கருப்பையில் கோளாறுகள் தோன்றும். அவர்கள் தொடர்ந்து பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் பலன் கிட்டும்.

சிலருக்கு வாயில் அதிக அளவில் கோழை தோன்றும். பேரீச்சம்பழம் கோழையை அறுத்து வெளியேற்றும்.

எவ்வித வயிற்றுக் கோளாறு உள்ளவர்களும் பேரீச்சம்பழத்தை நாடினால் போதும்.

உடல் பொலிவும், வனப்பும் அற்றவர்கள் தொடர்ந்து சில பேரீச்சம் பழம் உண்டு வந்தால், அழகையும், ஆரோக்கியத்தையும் சிறப்பாகப் பெறலாம்.

பேரீச்சம் பழத்தை வெண்ணெயோடு சேர்த்து சாப்பிட்டு வந்தால் மார்பகங்கள் வளரும், வளமையும் பெறும்.

விதை நீக்கிய பேரீச்சம்பழத்தையும் சர்க்கரையையும் சேர்த்து மிக்ஸியில் அரைத்து பாலில் சேர்த்துக் குடித்து வந்தால் மலச்சிக்கல் தீரும் எடைகூடும்.

நாள்தோறும் உணவுக்குப் பின் 2,3 பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் உமிழ்நீர் பெருகி செரிமானம் அதிகரித்து நுரையீரல் கபம் விலகி, தாது விருத்தியடையும்.

பேரீச்சம்பழத்தை உண்டு வந்தால் ரத்தம் பெருகும், நரம்பு வலுப்பெறும், கண் நோய் கரையும், பல நோய்கள் பறந்தோடும்.

இல்லற வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் இரவு உணவுக்குப் பின் இரண்டு, மூன்று பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டு, பால் குடிக்கலாம்.

**இரா.பாலகிருஷ்ணன், வரக்கால்பட்டு.தமிழ்நாடு**




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# யேர்மனியின் மூன்றாவது முகமாக

# தமிழ் மாணவி தெரிவு!

**FACE OF GERMANY**



Foto: Abi Saa





நர்த்தனா-கீர்த்தனா

யேர்மனியில் கல்வி கலை விளையாட்டு எனக் கலக்கப்புறப்புட்டுள்ளனர் எமது இளம் சந்ததியனர். அறிவியல் விளையாட்டுக்கள் உயர்கல்வித்தரங்கள் கலைகள் இவற்றில் எல்லாம் இன்று புகுந்து விளையாடுகின்றனர் நம் பிள்ளைகள்.
இன்று மொழியறிவின் தேர்ச்சி அவர்களுக்கு பரந்த அளவில் தங்களது திறமைகளைக்காட்ட கைகொடுக்கின்றது. படிக்காமல் கற்றுத் தெளியாமல் வெறும் அநுபவத்தை அடிப்படையாகக்கொண்டு கஸ்டப்பட்டு நாம் சாதித்ததை இன்று அவர்கள் கற்றுத் தெளிந்து இலகுவாக அழகாக சாதிக்கின்றனர். புலம்பெயர்ந்த புதிதில் நாம் இவை சாத்தியம் என்று கனவிலும் கண்டது கிடையாது.



புதுவயலில் விதைத்த விதைகள் எப்படி செழிப்புறவளருமோ அதுபோல் புலம்பெயர் சமுகத்தின் முதல் அறுவடை சிறப்பாகவே உள்ளது. இனி அவர்கள் தங்கள் வாரிசுகளை நெறிப்படுத்துவதில்தான் எமது தலைமுறை தலையெடுப்பது தங்கியுள்ளது.





யேர்மனியில் முகம்தெரியாதவர்களாக இருந்த நாம். இன்று யேர்மனியின் முகத்தின் (FACE OF GERMANY) மூன்றாவது முகமாகத் தேர்ந் தெடுக்கபட்டுள்ளோம் என்பது மகிழ்ச்சியானதே!
கடந்த வாரம் 20.09.2014 யேர்மனியில் இடம்பெற்ற FACE OF GERMANY மொடலிங் போட்டியில் நம் தாயகத்தைச் சேர்ந்த செல்வி நர்த்தனா மனோரஞ்சன் தெரிவானார்.
யேர்மனியில் பல மாநிலங்களிலும் இப்போட்டிக்கான தெரிவுகள் இடம்பெற்றன. 4000 வரையிலான இளைஞர்கள் யுவதிகள் இப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். Köln Streetcasting- 05.07.2014 நகரில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் 9 பேர் தெரிவானார்கள். அவர்களுள் நர்தனாவும் ஒருவர். Dresden ELBEPARK- 06.09.2014 நடைபெற்ற அரை இறுதிச் சுற்றுக்கு ஆண்கள் பத்துப்பேரும் பெண்கள் பத்துப்பேரும் தெரிவானார்கள். அதனிலும் நர்த்தனா தெரிவானார்.





Dresden ELBEPARK- 20.09.2014 நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலாம் இரண்டாம் இடத்தை யேர்மனியர்கள் தமதாக்கி வெற்றி பெற்றனர். போட்டிகளில் நர்தனா தனது சகோதரியுடன் (கீர்த்தனாவுடன்) இணைந்தே பங்குகொண்டார்.

போட்டியில் நர்த்தனா மனோரஞ்சன் -யேர்மனியின் முகம்- போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெற்றியீட்டினார். கல்வியிலும் கலைகளிலும் உயர வெற்றிமணி அவர்களை வாழ்த்துகின்றது.






## தீர்ப்பிடாதீர்கள்.

வசந்திக்கு காலையில் இருந்தே மனசு சரியில்லை. இப்போதெல்லாம் கணவன் ஒழுங்காகப் பேசுவதில்லையோ, தேவையான அளவு நேரம் செலவிடுவதில்லையோ என மனதுக்குள் ஒரே போராட்டம். "அலுவலகத்தையே கட்டிக் கொண்டு அழுகிறார். அவருக்கு என்னை விட வேலை தான் முக்கியம். என்மீது அன்பே இல்லை " என்றெல்லாம் மனதுக்குள் போராட்டம். தன்னை அறியாமலேயே இமைகளைப் பிரித்து வெளியே எட்டிப் பார்க்கும் கண்ணீர் துளிகளை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டே இருந்தாள். மாலையில் கணவன் வரும்போது பேசி விட வேண்டும் என அவளுடைய மனம் சொல்லிக் கொண்டே இருந்தது. என்னவெல்லாம் பேச வேண்டும் என்பதை மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலையில் அழைப்பு மணி ஒலித்த போது போய் கதவைத் திறந்தாள். கணவன் ஆனந்த் புன்னகையோடு நின்றிருந்தான். கையில் ஒரு பூங்கொத்து. வசந்தி நெற்றி சுருக்கினாள்.

"என்ன ? ஆபீஸ்ல உங்களுக்கு பொக்கே கொடுத்தாங்களா ?" வசந்தியின் குரலில் உற்சாகம் இல்லை.

"நோ..நோ.. வர வழியில உனக்காகப் போய் வாங்கினேன்" சொல்லிக் கொண்டே பூங்கொத்தை அவள் கையில் கொடுத்தான் ஆனந்த். ஷூவைக் கழற்றி விட்டு சோபாவில் போய் அமர்ந்த அவனை கேள்விக்குறியோடு பார்த்தாள் வசந்தி.

"ஏன் ? என்ன விஷயம் ?" பூக்களின் அழகில் அவளுடைய முகமும் கொஞ்சம் கொஞ்சமாய் மலரத் துவங்கியது.

"இல்லே... சும்மா நண்பர்கள் எல்லாம் சேர்ந்து பேசிட்டிருந்தோம், வீட்டுக் கதைகள், மனைவி பற்றியெல்லாம் பேசிட்டு இருந்தாங்க. உன் ஞாபகம் அதிகமா வந்துச்சு. நான் எவ்ளோ லக்கி உன்னை மாதிரி ஒரு நல்ல மனைவி கிடைக்கன்னு தோணுச்சு. அதான் ஒரு பூங்கொத்து" சொல்லி விட்டுச் சிரித்தான் ஆனந்த்.

வசந்தி நெகிழ்ந்தாள். அவளுக்கு காலை முதல் மாலை வரை இருந்த மன அழுத்தம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி ஓடியது.

"அப்போ நீங்க இதைப் புடிங்க என பூங்கொத்தை அவனிடமே நீட்டினாள்"

"ஏன் ? எனக்கெதுக்கு ?"

"நான் எவ்ளோ லக்கின்னு இப்போ எனக்குத் தோணுது, அதான்" வசந்தி புன்னகைத்தாள். அந்தப் புன்னகை, கேட்கவேண்டுமென மனதில் எழுதி வைத்திருந்தவற்றையெல்லாம் அழித்துப் போட்டது.

குடும்ப வாழ்க்கை "அடுத்த நபரைப் புரிந்து கொள்வதில்" இருக்கிறது. அடுத்த நபராய் மாறி சிந்திக்கும் போது பெரும்பாலான சிக்கல்கள் தீர்ந்து விடுகின்றன.. அதை விட்டு விட்டு அடுத்தவர்களைத் தீர்ப்பிடும்போது குடும்ப வாழ்க்கையின் அன்னியோன்யத்திலிருந்து விலகிப் போகிறோம்.

அலுவலகத்தில் கொஞ்சம் அதிக நேரமானால், "நம் மீது அன்பு இல்லை, குடும்பத்தின் மீது அக்கறை இல்லை, அதனால தான் லேட்டா வராரு" என சட்டென ஒரு தீர்ப்பை எழுதி விடுவது பெரும்பாலான வீடுகளில் சகஜம். ஒரு தவறு நடந்து விட்டால் அதைப் பொதுமைப்படுத்தி அந்த நபரை கடினமாய்த் தீர்ப்பிட்டு விடுகிறோம். அந்த தீர்ப்பு தொடர்ந்து வரும் நாட்களின் கணவன் மனைவிடையேயான அன்பையும் பிணைப்பையும் பெருமளவு அசைத்து விடுகிறது.

ஒரு தவறு நடந்தால் அந்தத் தவறை மட்டும் பார்க்கப் பழக வேண்டும். அந்தத் தவறை வைத்து அடுத்தவரின் குணாதிசயத்தைத் தீர்ப்பிடும் மாபெரும் தவறைச் செய்யக் கூடாது. நாம் தெரிந்தோ தெரியாமலோ அந்தத் தவறைத் தான் தவறாமல் செய்கிறோம்.

உதாரணமாக அழுக்குத் துணியை அழுக்குக் கூடையில் போடவில்லை என வைத்துக் கொள்வோம். "அதைக் கூடையில போடுங்க" என்பது ஒரு வழி. "அழுக்குத் துணியை அழுக்குக் கூடையில போடணும்" என்று சுட்டிக் காட்டுவது இன்னொரு வழி. "ம்ம்.. போட்டாச்சா... அழுக்குத் துணியைக் கூட அழுக்கு கூடையில போடறதில்லை. பொண்டாட்டி மேல கொஞ்சமாச்சும் அக்கரை இருந்தா தானே அதெல்லாம் தோணும்" என்பது மூன்றாவது வகை.

முதல் இரண்டு வகையும் ஒரு தவறைத் திருத்துவதற்கு வழிகோலுவன. மூன்றாவது வகையோ ஒரு தவறை வைத்து ஒருவருடைய குணாதிசயத்தை எடை போடுவது. இது மிகப்பெரிய மனவருத்தத்தை உருவாக்கிவிடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தீர்ப்பிடுதல் என்பது தன்னைப் போல அடுத்தநபரும் மாற வேண்டும் எனும் மனநிலையின் வெளிப்பாடு. அல்லது நான் தான் எல்லாவற்றிலும் சிறந்தவன், அடுத்தவர் அப்படியில்லை எனும் சர்வாதிகார ஈகோ. அல்லது நிகழும் எல்லாவற்றுக்கும் பின்னணியில் ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது என சந்தேகிக்கும் பலவீனமான சிந்தனை. எது எப்படியோ ? இவை எதுவுமே ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கையைக் கட்டியெழுப்ப உதவாது என்பதை மட்டும் மனதில் கொண்டால் போதும்.

அத்தகைய சிந்தனைகளின் போது ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மனதில் சொல்லிக் கொள்ளுங்கள். தவறுகள் இல்லாத மனிதன் இல்லை. ஒரு பூ சரியாகப் பூக்கவில்லை என்பதற்காக செடியே அப்படித்தான், தோட்டமே அப்படித் தான் என்றெல்லாம் முடிவு கட்டி விடாதீர்கள்.

தீர்ப்பிடுவதன் இன்னொரு முக்கியமான மனநிலை, அடுத்த நபரிடம் இருக்கும் நெகடிவ் விஷயங்களை மட்டுமே மனம் திரும்பத் திரும்ப ரிவைன்ட் பண்ணிப் பார்த்துக் கொண்டே இருப்பது. காதலிக்கும் போது வாழ்க்கை படு சுவாரஸ்யமாகவும் இனிமையாகவும் இருக்கிறது. திருமணத்துக்குப் பிறகு கரடு முரடாக, சண்டை சச்சரவுடன் இருக்கிறது. காரணம் என்ன ? ரொம்ப சிம்பிள். காதலிக்கும் போது காதலியின் நல்ல விஷயங்கள் மட்டுமே உங்கள் கண்களுக்குத் தெரியும். அதை மட்டுமே சிந்தித்து, சிந்தித்து உங்கள் மனம் காதலில் நிரம்பி வழியும். திருமணத்துக்குப் பின் அவர்களுடைய நெகடிவ் விஷயங்கள் மட்டுமே உங்களுக்குத் தெரியும். அதை பூதக் கண்ணாடியால் பார்த்துப் பார்த்து அவர்களை நீங்கள் முத்திரை குத்தி விடுகிறீர்கள்.

அடுத்தவரைத் தீர்ப்பிட வேண்டும் என தோன்றும் போது ஒரு நிமிடம் அடுத்த நபருடைய நல்ல விஷயங்கள் பத்தினைப் பட்டியலிடுங்கள். கொஞ்சம் சிந்தியுங்கள். உங்களுடைய தீர்ப்பிடும் சிந்தனை ஓடியே போய்விடும்.

தொடர்ச்சி 17ம் பக்கம்...

யேர்மனியில் Frankfurt நகரில்...
SARAVANAA BHAVAN® சரவணபவன்®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Kaiserstrasse 66, 60329 Frankfurt am Main (30 Mtrs from Railway Station) Tel : 069 97693374
a synergy of taste and quality across the globe ... every hour ... every day ...
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.
அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## குடும்ப வெற்றியின்

.....16ம் பக்கத் தொடர்ச்சி



ஒரு வாக்குவாதம். ஒரு சண்டை. அல்லது ஒரு கருத்து மோதல் இவை நடக்கும் போது ”நீ எப்பவுமே இப்படித் தான்”, ”உன் குடும்பமே இப்படித்தான்” போன்ற வார்த்தைகள் பறப்பதும், அதனால் குடும்பத்தின் நிம்மதி பறப்பதும் வாடிக்கை. அத்தகைய தருணங்களில் ஒரு நிமிடம் நிதானிப்பது அவசியம். உங்கள் மனம் முழுவதும் அடுத்த நபர் சொல்வது ”பொய்” எனும் சிந்தனையே மேலோங்கி இருக்கும். அதைக் கொஞ்சம் அழித்து விடுங்கள். “அந்த பேச்சில் உண்மை இருக்கலாம்“ என நினைத்து தெளிவான மனநிலையோடு கேளுங்கள்.

தீர்ப்பிடுதலை விட்டு விட்டால் வாழ்க்கை ஆனந்தமாய் இருக்கும். மன்னிக்கக் கற்றுக் கொண்டால் வாழ்க்கை மிகவும் ஆனந்தமாய் இருக்கும். அன்பு செய்யக் கற்றுக் கொண்டால் வாழ்க்கை அதிக பட்ச ஆனந்தமாய் இருக்கும் என்று ஒரு சொலவடை உண்டு. அன்பு நிரம்பியிருக்கும் இடத்தில் தீர்ப்பிடுதல் வருவதில்லை. அன்பின் பாகமான மன்னிப்பு வந்து விடுகிறது. நமது வாழ்க்கைத் துணையின் தவறுகளை மன்னித்து, இன்னும் அதிகமாய் அன்பு செலுத்தினால் குடும்ப உறவு சின்ன சொர்க்கமாய் மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இதைத் தான் அன்னை தெரசாவும் சொன்னார். ”நீங்கள் பிறரைத் தீர்ப்பிட ஆரம்பித்தால், அவர்களை அன்பு செய்ய உங்களுக்கு நேரம் இருக்காது“ என்று !

அடுத்த நபரின் இயல்புகளைப் புரிந்து கொண்டு நமது எதிர்பார்ப்புகளை வகைப்படுத்தினால் ஆனந்தம் அதிகரிக்கும். தீர்ப்பிடும் மனநிலையும் நம்மை விட்டு விலகிவிடும். தினமும் தோட்டத்திலிருந்த மரத்தை உலுக்கிப் பார்த்து மாம்பழம் விழவில்லையே என சலித்துக் கொண்டிருந்தானாம் ஒருவன். நீண்ட நாட்களுக்குப் பிறகு தான் அவனுக்குப் புரிந்ததாம் தான் உலுக்கிக் கொண்டிருப்பது மா மரத்தையல்ல, பலா மரத்தை என்று. பலா மரத்தில் என்ன தான் உலுக்கினாலும், என்ன தான் சபித்தாலும், என்ன தான் முயற்சி செய்தாலும் மாம்பழம் பறிக்க முடிவதில்லை. அதன் இயல்பு அப்படி. அப்படியே உங்களுடைய நச்சரிப்புகளால் பலா மரத்தில் மாம்பழம் தோன்றினாலும் கூட அது செயற்கையாய் ஒட்ட வைத்ததாய் இருக்குமே தவிர உண்மையிலேயே விளைந்ததாய் இருக்காது என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

”புத்தகத்தின் அட்டையைப் பார்த்து நூலின் தரத்தை எடை போடாதீர்கள்“ என்றொரு பழமொழி உண்டு. சில வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு நமது வாழ்க்கைத் துணையை தீர்ப்பிடுவது நூலை வாசிக்காமல், அட்டையைப் பார்த்தே விமர்சனம் எழுதுவது போல தவறானது. உணர்ச்சிகள் உங்களை உந்தித் தள்ளும். ஒரு வார்த்தையை வீசி உங்களுடைய ஆளுமையை நிலை நாட்ட மனம் படபடக்கும். வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள். கொஞ்சம் நிதானித்தால் உங்களுடைய கோபமும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் அடங்கும். இருட்டுக்குள் இருந்து கொண்டு வாள்வீசினால் தேவையற்ற இடங்களிலெல்லாம் காயம் படும் என்பது கவனத்தில் இருக்கட்டும்.

இணைந்து செயலாற்றப் பழகுங்கள். கணவன் மனைவி உறவு என்பதே இணைந்து பயணிக்கும் பயணம் தான். ஒருவருடைய குறைகளை மற்றவர் இட்டு நிரப்புவது தான் குடும்ப வாழ்க்கையின் அடிப்படை. வானத்தில் பறக்கும் பறவையைப் போன்றது குடும்ப வாழ்க்கை. அதில் ஒரு சிறகு கணவன், இன்னொரு சிறகு மனைவி. இரண்டும் இணைந்தே பயணிக்கும் போது தான் பறத்தல் சாத்தியமாகிறது. வானம் வசப்படுகிறது. ஒருவர் முரண்டு பிடித்தால் குடும்பம் எனும் பறவை தரையில் படபடக்குமே தவிர உயரங்களில் பறந்து திரியாது என்பதை மனதில் கொள்ளுங்கள்.





சேவியர்

சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி நடத்தினார்கள். நூறு தம்பதியரை வைத்து நடத்திய அந்த ஆய்வு சொன்ன விஷயம் ஒன்று தான். அடுத்த நபரை சட்டென தீர்ப்பிடாத மனநிலை தான் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையின் அடிப்படை !

”உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்”
எனும் போதனை குடும்ப வாழ்க்கையை அழகாக்கும். நீங்கள் தீர்ப்பிடக் கூடாது என விரும்பினால், அடுத்தவரைத் தீர்ப்பிடாதீர்கள். நீங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என விரும்பினால், நீங்களும் அதையே செய்யுங்கள். நீங்கள் அன்பு செய்யப்பட வேண்டும் என விரும்பினால் நீங்கள் அதை விட அதிகமாய் அன்பு செய்யுங்கள். தீர்ப்பிடுதல் வாழ்வின் ஆனந்தத்தைக் கொள்ளி வைக்கும்.

தீர்ப்பிடும் பழக்கத்தை நிறுத்துவது என்பது அழுக்கான தண்ணீரை கீழே கொட்டி விடுவது போல. இப்போது உங்கள் மனம் எனும் பாத்திரம் காலியாய் இருக்கிறது. அப்படி காலியாகவே இருக்க விட்டால் மீண்டும் கொசு முட்டையிட்டு அழுக்காக்கி விடும். எனவே அதில் பாராட்டு, அங்கீகாரம், அன்பு போன்றவற்றை இட்டு நிரப்புங்கள். உங்கள் வாழ்க்கை அற்புதமாய் மாறிவிடும்.

உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்கள் நேசிக்கிறீர்கள், மதிக்கிறீர்கள், முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். வார்த்தைகளால் மட்டுமல்ல, சின்னச் சின்ன அன்பான செயல்களால். பழைய காலத்தில் அல்வாவும், மல்லிகைப் பூவும் வாங்கி வருவது நகைச்சுவையின் வெளிப்பாடல்ல, உன்னை மனதில் நினைக்கிறேன், உனக்காய் சுவையையும், வாசனையையும் கொண்டு வருகிறேன் என்பது தான்.

கடைசியாய் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்.
வாழ்க்கையின் வெற்றி என்பது என்பது நாம் “சரியாய்“ இருக்கிறோமா என்பதை விட “ஆனந்தமாய்“ இருக்கிறோமா என்பதில் தான் அடங்கியிருக்கிறது ! ஆனந்தமாய் வாழுங்கள்.


ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.பரமேஷ் அவர்களின்
காலத்தால் அழியாத பழைய புதிய பாடல்கள்!




சங்கீத சாம்ராஜ்யம்-4 அன்றும் இன்றும் என்றும்

ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.பரமேஷ், இலங்கையில் முதல் தமிழிசைதட்டு இசையமைத்து, இயற்றி,பாடி வெளியிட்டவர். அவர்களின் புத்தம் புதிய பாடல்கள் ” சங்கீத சாம்ராஜ்யம்” 2, 3, 4 என்று மூன்று CD கள் தயாராகிவிட்டன. புத்தம் புதிய பாடல் களுடன் எமது ஈழத்து இசைச் சரித்திரத்தில் சாதனை படைத்த, இலங்கையின் முதல் தமிழிசை தட்டில் வெளிவந்த பாடல்களுடன் சங்கீத சாம்ராஜ்யம் இசைதட்டில் வெளிவந்த பாடல்களுடனும்,எமது ”ஈழத்து pop மெல்லிசை பாடல்களின்” தனித்துவம் அழியாத ”புத்தம் புதுப்பாடல்களையும்”பெற்றுக் கொள்ள விரும்புவோர்

தொடர்புகளுக்கு: prabalini007@gmail.com
Prabalini Prabakaran
-first srilankan tamil female music director
www.prabalini.com



Lucky Fly
SINCE: 1995



London Zurich Amsterdam
ஆகிய இடங்களில் இருந்து
இலங்கை இந்தியா போன்ற
நாடுகளுக்கு விமானச் சீட்டுக்கள்
பெற்றுத்தரப்படும்.

இந்தியா விசா துரிதகதியில்...

Essan நகரில் எமது
புதிய கிளைநிறுவனம்
(முருகன் கோவிலுக்கு
அருகாமையில்)

www.golden-travels.de
Sri lanka
ab 599 €-750€
Tel: 0234 239 90 32
Handy:0179 14 84 892

Lucky Fly, Allee Str 38-40a, 44793 Bochum



யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!

THUSHI DEKO GERMANY

New in Germany
THUSHI DEKO
GERMANY

T.Thiruselvam:

Tel: 02305-85945
0176-60810813





அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



# என்ன சொல்லி விழுகிறது மழைத்துளி

## வெற்றிமணியின் படைப்பாளி சேவியர் முதல் பரிசைப் பெற்றிருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் மணி விழாவை முன்னிட்டு, தமிழகத்தின் முன்னணி பண்பலையான சூரியன் பண்பலை சர்வதேச அளவில் ஒரு மாபெரும் கவிதைப் போட்டியை நடத்தியது. "என்ன சொல்லி விழுகிறது மழைத்துளி" என்பது போட்டிக்காய் கவிப்பேரரசு வைத்த தலைப்பு.

போட்டிக்கு வந்து சேர்ந்த சுமார் ஐயாயிரம் கவிதைகளில் முதல் பத்து இடங்களுக்கான கவிதைகளை கவிப்பேரரசு வைரமுத்து தெரிந் தெடுத்தார். அதில் நமது வெற்றிமணியின் படைப்பாளி சேவியர் முதல் பரிசைப் பெற்றிருக் கிறார். சூரியன் பண்பலை நடத்திய பரிசளிப்பு விழாவில், கவிப்பேரரசின் கையால் அவர் அந்த விருதைப் பெற்றிருக்கிறார்.

வெற்றிமணியின் அன்புக்குரிய எழுத்தாளர் குடும்ப வெற்றியின் இரகசியம் என்ற தொடரை வெற்றமணி யில் பலமாதமாக தொடர்ந்து எழுதிவருகின்றார். ஒவ்வொரு குடும்பத்தாரும் வெற்றிமணி எடுத்ததும் குடும்ப வெற்றியின் இரகசியம் வாசிக்கத் தவறுவதில்லை. வாசித்தவர்கள் இது எமக்கு பொருத்தமாக இருக்கிறது நான் மனைவிக்கு காட்டினேன் வாசிக்கம்படி அந்தப்பக்கத்தை மடித்துவைத்தேன் என்பவரும். அப்படியே இது கணவருக்கு பொருந்துகிறது அவருக்கு வாசித்துக் காட்டினேன் என்று சொல்பவரும். வெற்றிமணி வாசகர்களில் பலர். நடைமுறைப்படுத்த ஆசைப் படும் ஒரு தொடர் இது.

இத்தொடரினை உங்களில் ஒருவராக இருந்து அலசி எழுதும் இலட்சிய எழுத்தாளர் இன்று மாபெரும் கவிதைப் போட்டியில் தமிழகத்தில் பெற்ற வெற்றியில் மிகவும் மனம் மகிழ்கிறோம். அவர் மென்மேலும் பல பரிசுகள் பெற்று வளர வெற்றிமணி வாழ்த்துகின்றது.

**முதல் பரிசு பெற்ற கவிதை இதோ.**

என்ன சொல்லி விழுகிறது
ஏன்
ஆயிரம் கண்களால் அழுகிறது ?

கருக்கொண்ட முகிலின்
கதவுடைத்த
குறைப் பிரசவக் குழந்தையா ?

மேகத் தொட்டிலில்
புரண்டு படுக்கையில்
தவறி விழுந்த மழலையா ?

ஒருவேளை,
புகுந்தவீட்டுப் பயத்தில்
தாவித் தவிக்கும்
தளிர் பருவக் குமரியோ ?

ஈரம் கசியக் கசிய
என்னதான் சொல்கிறது மழை ?

குதித்தாகி விட்டது
கால்களை எங்கே
மிதிப்பதெனும்
குழப்பம் அதற்கு. !

அதோ
காகிதக் கப்பலோடுக்
காத்திருக்கும்
அந்த ஹைக்கூக்
கவிதையின்
முதலெழுத்தாகவா ?

வற்றிக்கொண்டிருக்கும்
வைகையாற்றின்
வயிற்றுப் பகுதியிலா?

ஒற்றைக்காலோடு பூமியைப்
பற்றிக்கொண்டிருக்கும்
பச்சைப் புற்களின்
புன்னகைப் பற்களிலா ?

சட சடச் சங்கீத்தை
எனக்குள்
சுடச் சுடச் திணிக்கும்
இலைகளின் தலைகளிலா ?

வற்றாக்கடலின் ஓரத்தில்
ஒற்றைப்பாறையின் பல்லிடுக்கில்
சிங்கார வாய்திறந்து காத்திருக்கும்
அந்த சின்ன சிப்பியின் தாகத்திலா ?

இதழ்களின் இடைவெளியிலும்
கவிதை எழுதிக் காத்திருக்கும்
அந்த
வாசனைப் பூக்களின்
மகரந்த மடியினிலா ?

மரங்களும் மலைகளும்
மேகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்
அந்த
கானக சாலையிலா ?

குழப்பத்தின் கண்ணி வெடியில்
துளித்துளியாய்
சிதறுகிறது மழை !

போதி அடியில்
ஞானம் கண்ட புத்தனைப் போல,
பாதி வழியில்
ஞானம் கொண்டது மழை !

நான் விழுந்து நீங்கள்
நனைந்தது போதும்,
எனில் வீழ்ந்து
நானே நனைய வேண்டும்.
தயவுசெய்துக் காட்டுங்கள்
வயலுக்குள் உயிரைநட்டு
உயிருக்குள்
என் வருகைக்குக் காத்திருக்கும்
ஓர் விவசாயி நண்பனை

அங்கே வீழ்வேன்.
அங்கே எழுவேன் !
வேரில் விழுவேன், வேறாய் எழுவேன்.

**-சேவியர்.**




# திருகோணாமலையில் தமிழரைக்காணோம்!

## இன்று திருகோணமலையும் போய் திருக்கோண மலையும் போய் “திருக்கோணமலைய“ என்றாகி வருகின்றது.






படங்கள்: வெற்றிமணி

மாதவி

அடைமழை இரவு 7.மணி தெருக்களில் உள்ள பாதைகள் எதுவும் புரியவில்லை. சாரதி வண்டியை நிறுத்த எட்டி தெருவோரம் உள்ள கடைக்குள் சென்று லூட்டஸ் பார்க் றோட்டால்! எந்த றோட்டால் போகவேண்டும். விசாரித்தேன். எப்படிப் போவது என்று அவர்களுக்குப் புரியவில்லை. தெருவில்வந்த ஒரு வயதானவர் (எனது வயது தான்) அவரிடம் விசாரித்தேன் அவருக்கும் புரிய வில்லை. அடைமழைக்குள்ளும் எனது சாரதிக்கு ஏதோ புரிந்திருக்கவேண்டும்.

உடன் இறங்கிவந்து பெரியவரிடம் கேட்டார். நான் மழை என்பதால் வாகனத்திற்குள் ஏறிவிட்டேன். சாரதியம் முதியவரும் உறறவுக்காரர்கோல் சிரித்து சிரித்துப் பேசினர். பின்னர் வந்து வாகனத்தில் சாரதி ஏறினார். சாரதியிடம் இப்ப பாதை தெரியுமா என்றேன். மட்ட தண்ணுவா என்றான் சாரதி. வாகனம் லுட்டஸ் பாக்நோக்கிப் பறந்தது.

காலை எழுந்து பார்த்தேன். கடலுக்குள் இரவு குளிக்கச்சென்ற சூரியன் மெல்ல வெளியில் வந்து கொண்டு இருக்க வெளிநாட்டவர் பலர் குளிக்க கடலுக்குள் இறங்கியவண்ணம் இருந்தனர். கோணேசர் ஆலயம் தூரத்தில் உயரத்தில் தெரிந்தது. தென்னைமரங்கள் பச்சைப்பசேல் என இருந்தது. எங்கும் பசுமையாக பச்சையாக இருந்தாலும் தெருவோரம் எதிலும் பச்சைத் தமிழனைக்காணவில்லை.

அதனால்தான் தெருவில் பாதைமாறினாலும் இறங்கி சாரதியே விசாரித்தான். எனது சாரதியின் பாட்டனார்காலத்தில் என்றால் இது சாத்தியமாக சத்தியமாக இருந்திருக்க முடியாது. அப்போ தெருவெங்கும். தமிழ்தான். ஒரு சந்தேகம் அத்துடன் சந்தோஷம் இந்த நகரத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சம்மந்தன் எப்படித் தெரிவானார் என்பதே. அனைத்தும் சிங்களமயம்.

சரி காலை முதல் கோணேசர் ஆலயத்திற்கு சென்றேன். இராவணன் கல்வெட்டு அழகாக ஆளமாக இருந்தது. கோவிலுக்கு செல்லும் இருமருங்கிலும் கடைகள் கடைகளில் சிங்களப் பாடல்கள் ஒலித்தவண்ம் இருந்தன. ஆலயம் புதிப்பிக்கப்படுகின்றது. முன்னே ஒரு பெரிய சிவனின் சிலை.



பொன்னிறத்தில் பள பள என ஜொலித்துக் கொண்டு இருந்தது. சிலை மிகவும் பிரமாண்ட மானது. சிமெந்தில் செய்ப்பட்டு இருந்தது. புத்தரின் இருப்பை ஞாபகமூட்டும் வண்ணம் அது அமைந்துள்ளது. பழமைவாந்த அந்த ஆலயத்தில் அதன் புனிதத்தை அதன் தொன்மையை காட்டும் முறைக்கு அந்தச் சிவனின் சிலை முற்றிலும் முரணாகவே இருந்தது. தமிழர் சரித்திரம் தொன்மைகள் யாவும் பொம்மைகள் ஆகிவிட்டன. தொன்மையைக்காட்டும் வண்ணம் திருத்த வேலைகளும் புதிய சிலைகளும் அமைக்கப்பட வேண்டும். சிவனின் சிலையை விட சிவலிங்கம் பொருத்தமானது. கருங்கல்லில் வடித்திருந்தால் பொருத்தமானதாகவும் அமைந் திருக்கலாம்..

அடுத்து கன்னியா வென்னீர் ஊற்றுக்குச்சென்றேன். நெஞ்சில் வென்னீர் கெட்டியது அங்கும் கிணற் றுக்குச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் சிங்களக் கடைகள்கள். குறிப்பாக குறிசொல்லும் சில பெண்கள் மட்டும் மலையகத் தமிழர்கள்.

வென்நீர் ஊற்று ஏழுகிணறுகளும் இன்றும் அதிசயமாகவே இருக்கின்றது. ஒவ்வொரு கிணறும் ஒவ்வொரு வெப்பம். கிணற்றுக்கு முன் இடிபட்ட கட்டிடத்தின் செங்கல் அத்திவாரம் ஏதோ ஒரு சங்கதி சொல்வதுபோல் இருந்தது. அதனைப் படம் பிடித்தேன்.

அருகில் ஒரு குரல் தமிழ்குரல் ஒரு பெண். ஒரு சங்கதி நான் இந்த ஊரில்தான் ஆசிரியையாக வேலை செய்தேன். 1977 ஆண்டு இரு நாட்கள் ஊரடங்கு சட்டம் போட்டுவிட்டு இருந்த இடம் தெரியாமல் இதில் இருந்த பிள்ளையார் கோவில் அழிக்கப்பட்டது. முன்பு இங்கு இந்த இடத்தைச் சுற்றி தமிழ் குடும்பங்கள் பல இருந்தன. கடைகள் யாவும் தமிழர்களது. என்றார் அந்த ஆசிரியை. நான் உங்களுக்குச் சொன்னேன். இனி வருங் காலத்தில் சொல்பவர்களும் மறைந்துவிட சரித்திர மும் மறையும்.

இப்போ அரசமரத்தின் ஒரு புறம் பிள்ளையாரும் மறுபுறம் புத்தரும் வீற்று இருக்கிறார்கள்.

கிணற்றுக்கு பின்னே கிறணற்றை நோக்கியபடி ஒரு புத்தர் மலையிலும் வீற்று இருக்கின்றார். அங்கு இருந்த சிவலிங்கம் இடிக்கப்பட்டு அருகில் ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒன்று இந்த வென்நீர். ஊற்றுக் கதை உண்டு. இராவணின் தாய் நோய் உற்று இருந்த வேளை சிவலிங்கத்தை வழிபட விருப்பம் கொண்டதால். இராவணன் மலையை வெட்டி சிவலிங்கத்தை பெயர்த்துக் கொண்டு தாயிடம் செல்ல இருந்த வேளை தாய் மரணமான செய்தி அவருக்கு எட்டியது. 24 மணித்தியாலத்திற்குள் கிரிகையை செய்ய வேண்டும் என்ற தாயின் விருப்புக் காரணமாகவும். உடன் வாளால் குத்தி ஏழு நீர் ஊற்றை உருவாக்கினார். அந்த நீரூற்றில் இருந்து நீர் எடுத்து தாயின் கடமையை முடித்தார். இது ஒரு புராணக்கதை. பிள்ளையர் பிடித்து வைத்து கிரிகை முடித்தார். இப்போ பிள்ளையாரை அகற்றி ஆலமரத்தடியில் வைத்து விட்டார்கள்.

ஆலமரத்தடியில் இருந்து அகல அதிகநாட்கள் செல்லாது.



# யாழ் குடிநீரில் கல்சியத்தின் அளவு அதிகரிப்பு!

## பாரிய பாதிப்பு என எச்சரிக்கை!!!



யாழ்ப்பாணத்தில் தற்போது சுத்தமான குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு இரு காரணங்களை மக்கள் கூறுகின்றனர்.

ஒன்று- கல்சியத்தின் படிவு யாழ்ப்பாண நிலகீழ் (கிணறு) தண்ணீரில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை.

இரண்டாவது- கடும் வரட்சி. இந்த இரண்டு காரணங்களிலும் முதலாவது காரணம் பெரும் பிரச்சினையாக யாழ்ப்பாணத்தில் தற்போது உருவெடுத்துள்ளது.

யாழ்ப்பணத்தில் நிலகீழ் குடிநீரில் கல்சியப் படிவுகள் ஆரம்பகாலம் முதலே இருந்தது. ஆனால் கடந்த சில வருடங்களாக குடிநீரில் கல்சியத்தின் படிவு நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவும் இதனால் கிணறுகளில் இருந்து எடுக்கும் நிரை குடிக்க முடியாமல் உள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

அத்துடன் தேநீர் வைப்பதற்காக நீரை சூடாக்கும் போது கல்சியம் கரைந்து நீரை சுவையற்றதாக்குவதாகவும் கொதிக்க வைக்கும் பாத்திரங்கள் கூட உடனடியாகவே பழுதடைகின்றது எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இதனால் தற்போது போத்தல் குடிநீரை பயன்படுத்துவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கல்சியத்தின் அளவு நிலகீழ் தண்ணீரில் அதிகரிப்பதற்கு காரணம் என்ன என்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகள் பரிசோதனை நடத்துகின்றனர். ஆனால் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி ஆய்வு செய்து அதற்கு தீர்வு காணும் திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. வடமாகாண சபைக்கு அந்த ஆய்வுகளை செய்வதற்கான வளங்கள் இல்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை நிலத்திற்கு அடியில் உள்ள முருகைக் கற்கள் உருகுவதால் கல்சியத்தின் அளவு குடிநீரில் கலப்பதாக யாழ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த புவியியல் விரிவுரையாளர் ஒருவர் கூறினார். முருகைக் கற்கள் உருகுவதற்கு இரண்டு காரணங்களை அவர் வெளியிட்டார்.

### யுத்த காலங்களில் பயன்படுதப்பட்ட குண்டுகள் காரணமா?

ஒன்று- யுத்த காலங்களில் பயன்படுதப்பட்ட குண்டுகளின் இரசாயணங்கள் மழை நீரில் கலந்து நிலகீழ் முருங்கைக் கற்களில் தாக்கங்களை ஏற்படுத்தி யிருக்கலாம்.

இரண்டாவது- கடந்த சில வருடங்களாக நிலவும் கடும் வரட்சியினால் முருகைக் கற்கள் உருகுவதற்கு காரணமாக இருக்கலாம் என்று இந்த இரு காரணங்களை அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இதற்கான சரியான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும் என்றும் இல்லையேல் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடிநீர் தட்டுப்பாடு உட்பட பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படலாம் என்றும் கால்நடைகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த சில மாதங்களாக கால்நடைகள் காரணம் இன்றி உயிரிழப்பதாக பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். அதேவேளை யாழ் தீவுப் பகுதிகளில் குடிநீர் இல்லை என்றும் தண்ணீருடன் மண் கலந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

நிக்ஷன்


திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது
விழா ஒழுங்கமைப்பு K S இல் நிச்சயிக்கப்படுகிறது!

அழைப்பிதழ்கள் அன்பளிப்பு பொருட்கள் மணவறை
பலூன் அலங்காரம் மண்டப அலங்காரம், ஐயர் ஒழுங்கு,
மங்களவாத்திய ஒழுங்கு பூமாலை ஒழுங்கு,
மணமகள் அலங்காரம் புகைப்படம் வீடியோ,
ஒளி ,ஒலி அமைப்பு DJ
கேக் வகைகள் சிற்றுண்டி
சைவ,அசைவ உணவு.
குளிர்பானங்கள்

KS Services











தொடர்புகளுக்கு:
Tel. 0049 21025300247
Mobil. 004917610247194
Mobil. 00491722192035
E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de

KS Services
Berliner Str. 49- 40880 Ratingen

வாகன ஒழுங்கு தங்குமிட வசதி.
ஐரோப்பா தழுவியசேவை.
இன்னும் பல சேவைகள்
உங்களின் எண்ணங்கள்
எங்களின் கை வண்ணங்களில்

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்





# குழந்தைகள் வழிகாட்டியாக நாம்!

**Dr.புஷ்பா கனகரட்ணம்**
Ph.D., C. Psych.Clinical Psychologist

எம் குழந்தைகளின் முதல் தேவை அன்பு என்பது எமக்கு தெரியும். அடுத்தபடியாக எது தேவை? கட்டமைப்பு. ஆரம்பத்தில் இருந்தே, அரவணைப்பும் கட்டமைப்பும் கிடைக்க பெறும் பிள்ளைகள் வளமாக வாழ்வார்கள் என்கிறன பல ஆய்வுகள்.

குழந்தைகள் மேம்பாட்டில், பெற்றோர் பங்கு இன்றியமையாதது. அன்பு, குழந்தைகளை தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் தன்-மதிப்பு உள்ளவர்களாகவும் வளர உதவுகிறது. அவரவர் கலாச்சாரத்தையும் ஆளுமையையும் பொறுத்து அன்பு காட்டுதல் வேறுபடும். புன்னகையோ, அணைப்போ, ஊக்கமோ, வார்த்தைகளோ, அக்கறையோ, அல்லது பிள்ளையோடு நேரம் செலவளித்தலோ, எதுவாகவும் இருக்கலாம். ஒரு நல்ல உறவுக்கு அத்திவாரமாக அன்பு அமையும்போது, ஒரு குழப்பத்திலோ, துன்பத்திலோ, பிள்ளைகள் இயல்பாகவே பெற்றோரை நாடுவார்கள்.
அந்த அன்புக்கு ஏங்கும் நிலையில் இருக்கும் பிள்ளைகள், தன்னம்பிக்கை மற்றும் தன்மதிப்பு குறைந்தவர்களாக வளரும் ஆபத்து இருக்கிறது. இவர்கள் எதிர்மறையான வழிகளில் அந்த அன்பை, கவனிப்பை, நல்லுணர்வை பெற விளையக்கூடும். குழப்பம் விளைவிப்பது, நண்பர்களின் அங்கீகாரத்தை தேடுவது, மற்றும் மது, போதைப்பொருள் பாவனையில் இவர்கள் இறங்கலாம்.

அன்பு முக்கியம், ஆனால் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அது மட்டுமே போதாது. குழந்தைகளுக்கு கட்டமைப்பும், மேற்பார்வையும் தேவை. ஆரம்ப காலத்தில் இருந்தே, நாளாந்த நடைமுறை (routine) என்று ஒன்று இருந்தால் தான் தம்மிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.
தெளிவான வரைமுறைகள், எதிர்பார்ப்புகள் மூலம், ஏற்புடைய பழக்கவழக்கங்கள் எவை என பெற்றோர்கள் வழிகாட்டுகிறார்கள். ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் ஒரு விளைவு இருக்கிறது என்பதை பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் கற்பிக்கிறார்கள். ஏற்புடைய பழக்கங்களை அடையாளம் கண்டு ஊக்குவிப்பதன் மூலம், பிள்ளைகளில் நல்ல பழக்கவழக்கங்களை பெற்றோர் வலுப்படுத்துகிறார்கள்.
அடித்தல், உரக்க கத்துதல், மற்றும் அவமதித்தல், பிள்ளைகள் மனதை பாதிக்கிறது. சுருக்கமான சலுகை தடுப்பு (withdrawal of privileges) அல்லது இயல்பு செயல் தடுப்பு (time out) கூடுதல் பயனுள்ளதாக இருக்கிறது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு ஒரு மிக முக்கியமான முன்மாதிரி. பெற்றோரை பார்த்து தான் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்தல், பொறுமை, தெளிவான தொடர்பாடல் என்பவற்றை பெற்றோரை பார்த்து பிள்ளைகள் தெரிந்து கொள்கிறார்கள். இதனால் தான், வீட்டில், வன்முறை, உரக்க கத்தல், போன்ற விடயங்களை தவிர்ப்பது முக்கியமாகிறது. கண்டிப்பான வளர்ப்பு முறை (discipline) என்றால் என்ன?

Discipline என்பது தண்டிப்பது அல்ல. கட்டுப்பாடுகள், அதன் விளைவுகள் என்பதையும் விட மேலான விடயம். அதன் உண்மையான அர்த்தம் கற்பித்தல் (American Academy of Pediatrics, 1998). அதாவது வரைமுறைகள், மற்றும் ஆதரவு வழங்குவதன் மூலம், பிள்ளைகள் பிழைகள் மூலம் கற்றுக் கொள்வதற்கும், உணர்வுகளை நிர்வகிப்பதற்கும், ஏமாற்றங்கள், குழப்பங் களை சமாளிப்பதற்கும், மற்றவர்களுடன் ஆரோக்கியமான தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கும் உதவுவது தான் discipline, அதாவது உரிய வளர்ப்பு முறையாகும்.

பெற்றோராக நான்கு வேறுபட்ட வழிகளில் நாம் பிள்ளைகளை வளர்க்கிறோம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்:

ஆதிக்கமான பெற்றோர் (Authoritarian):
கீழ்படிவு, பழமை, ஒழுங்கு என்பவற்றை விரும்புவார்கள்
தண்டனையாக இவர்கள் பிள்ளைகளை அடிக்கக்கூடும்
பொதுவாக, தெரிவு செய்யும் உரிமை மற்றும் பேச்சுரிமை இருக்காது

இதன் விளைவு, பிள்ளைகளுக்கு தன்னிச்சையாக முடிவுகள் எடுப்பது கடினமாகலாம். மற்றவர்களை தொடர்பவர்களாக இருப்பார்கள். எதிர்ப்பு மனப்பான்மை, கோபம், மற்றும் தன்மதிப்பு குறைந்தவர்களாக பிள்ளைகள் வளரக்கூடும்.
தடை விதிக்காத பெற்றோர் (permissive)
வரைமுறைகள், ஒழுங்குகளை அதிகமாக விதிக்க மாட்டார்கள்
ஒரு கட்டமைப்பை கொடுக்க மாட்டார்கள்
வரைமுறைகளை விதித்தாலும், அவை பின்பற்றப்படுகின்றனவா என்பதை கவனிக்க மாட்டார்கள்
பெரும்பாலும் இதன் விளைவுகள் என்னவென்றால், பிள்ளைகள் சுய கட்டுப்பாடு குறைந்தவர்களாகவோ சிறு ஏமாற்றங்கள், பிரச்சனைகளை சமாளிக்க முடியாதவர்களாகவோ வளரக்கூடும். மன முதிர்ச்சி அடைவதும், பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதும், இவர்களுக்கு பிரச்சனை ஆகலாம்.

புறக்கணிக்கும் பெற்றோர் (neglectful)
இவர்கள் பிள்ளைகளை நிராகரிப்பார்கள் அல்லது புறக்கணிப்பார்கள்
பிள்ளைகள் வாழ்வில் ஈடுபாடு இருக்காது
தன் விருப்பம் போல் பிள்ளையை இயங்க விடுவார்கள்
இவர்கள் குழந்தைகள்இ பல சவால்களை எதிர்கொள்ளலாம். தம் திறனை வளர்த்து கொள்ளல்இ நம்பிக்கை மற்றும் தன்மதிப்பு குறைவு போன்றவற்றில் சிக்கல் ஏற்படலாம்.

நம்பிக்கைக்குரிய பெற்றோர் (authoritative)
ஏற்புடைய வரைமுறைகளை விதிப்பார்கள்
திடமாகஇ நியாயமாக, மற்றும் கொள்கை மாறாதவர்களாக இருப்பார்கள்
யதார்த்த பூர்வமான எதிர்பார்ப்புகளை வைத்திருப்பார்கள்
பிள்ளைகள் சுதந்திரத்தை, தனித்தன்மையை ஊக்குவிப்பார்கள்
தெளிவான தொடர்பாடல் மற்றும் காரணப்படுத்தல் இருக்கும்
பிள்ளைகள் தெரிவுக்கு அனுமதி கொடுத்து அவர்கள் உள்பலத்தை ஊக்குவிப்பார்கள்
பெரும்பாலும் இதன் விளைவு:

பிள்ளைகள் பொறுப்புடனும், தன் காலில் நிற்க கூடியவர்களாகவும், உயர் சுயமதிப்பு உள்ளவர்களாகவும், தம் கோபம் சார்ந்த உத்வேகத்தை கட்டுப்படுத்த கூடியவர்களாகவும் இருப்பார்கள். இத்தகைய பிள்ளைவளர்ப்பு, தடைவிதித்தல் என்பதற்கும் சுதந்திரம் கொடுத்தல் என்பதற்கும் இடையில், ஒரு சமநிலைமையை உருவாக்குகிறது. இது குழந்தைகளுக்கு அர வணைப்பையும் தகுந்த ஆதரவையும் கொடுக்கிறது.

தொடர்ச்சி 21ம் பக்கம்




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

21ம் பக்கத் தொடர்ச்சி

## குழந்தைகள் வழிகாட்டியாக நாம்!

பிள்ளை வளர்ப்பை இலகுவாக்கவும், திறம்பட செய்யவும் பின்வருவன உதவலாம் என்கிறனர் ஆய்வாளர்கள் (Brazelton & Sparrow, 2003)

வீட்டுக்கு பொதுவான சில சட்டதிட்டங்களை வைத்துக்கொள்ளுங்கள். உதாரணமாக அவை பாதுகாப்புஇ மற்றும் வலு பெறுமானங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். வீட்டு காரியங்கள் நிறைவேற்றல்இ அல்லது வீட்டுக்கு வரும் நேரம் போன்றவற்றை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றது போல்இ பிள்ளையின் வயது அல்லது முதிர்ச்சி நிலை சம்பந்தப்பட்டு மாற்றிக்கொள்ளலாம்.

அவர்களிடம் நீங்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளை தெளிவு படுத்துங்கள். எதிர்பார்ப்புகள் யதார்த்தமானவையாக இருக்கட்டும்.

எதற்கு மறுப்பு தெரிவிப்பது, வாக்குவாதம் செய்வது, எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், என்பதை தேர்ந்தெடுங்கள். இது வயதை பொறுத்து அமையும். உதாரணமாக, நடை பயில ஆரம்பித்திருக்கும் ஒரு குழந்தை என்றால், உடையும் பொருட்களை எட்டாத தொலைவில் எடுத்து வைத்தால், அவர்களுக்கு எந்த நேரமும், “இதை செய்யாதே, அதை செய்யாதே..“ என்று தடை விதிக்க தேவையில்லை. முக்கியமான விடயங்களுக்கு மட்டுமே இல்லை எனும்போது அந்த முக்கியத்துவம் குழந்தைகளுக்கு புரியும். நீங்களும் அந்த சொல்லை எந்த நேரமும் பாவிக்க தேவைப்படாது.

விடலைப்பருவத்து பிள்ளைகளுக்கும் இதே போல் தான். சிறு பிரச்சனைகளை புறக்கணித்து விடுங்கள். போதைபொருள் பாவனை, படிப்பு, மற்றும் பாலியல் பழக்கவழக்கங்கள் சார்ந்த பொறுப்பு, போன்ற முக்கியமான விடயங்களில் கற்பித்தலும், கண்டிப்பும் வையுங்கள்.

பிள்ளைகள் மீது கண்டிப்பு, கற்றல் சார்ந்து இருக்கவேண்டும். உங்கள் உணர்வுகளுக்கு வடிகாலாகவோ, பழி வாங்குதலாகவோ இருக்ககூடாது.

தண்டனை என்பது உடலையோ உள்ளத்தையோ காயப்படுத்த கூடாது.

வளர்ந்து வரும் பிள்ளைகள் முதிர்ச்சிக்கு தக்கவாறு, அவர்கள் சலுகைகள்இ மற்றும் பொறுப்புகளை மீளாய்வு செய்து, மேற்பார்வையுடன் அவர்கள் சுதந்திரத்தை படிப்படியாக ஊக்கப்படுத்துங்கள்.

பிள்ளைகள் எப்படி வளர்கிறார்கள் என்பதில் பெற்றோர் வளர்ப்பு முறைகளை விடவும் வேறு காரணிகளும் பங்கு வகிக்கின்றன. இவை கலாச்சார நம்பிக்கைகள், நண்பர்கள் பழக்கவழக்கங்கள், குடும்ப சூழல், மற்றும் சமூக வலுப்பெறுமானங்கள் போன்ற காரணிகளாக இருக்கலாம். இவை பெற்றோர் பிள்ளைவளர்ப்பு பாணியை பாதிக்கிறது. உதாரணமாகஇ நம்பிக்கைக்குரிய பிள்ளைவளர்ப்பு பாணி சில சூழல்களில், சில சமூகங்களில், கூடுதல் பயனை அளிக்கிறது.

நாம் நினைவில் வைத்திருக்க வேண்டியது என்னவென்றால், ஒருவருமே பிழையே செய்யாத பெற்றாராக, perfect ஆக இருக்கமுடியாது என்பது தான். நாம் பிழையே விடவில்லையானால், பிள்ளைகள் எப்படி எம்மிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும்? மன்னிப்பையும், தவறை உணர்தலையும்இ திருந்துதலையும்இ எப்படி கற்றுக்கொள்ள முடியும்? ஆகவே, அது நம் இலக்கல்ல. ஆனால்இ பெற்றார் என்ற நிலையில் நாம் தவறு செய்யும் போது, அதை ஏற்றுக்கொள்வதும், பிள்ளைகளிடம் அதை விளங்கப்படுத்துவதும் முக்கியம் ஆகும். அதீதமாக அல்ல, அளவாக. அவர்கள் எம் உளவியல் நிபுணராக தேவையில்லை. நாம் நம் பிள்ளைகளை விடவும் வயதிலும், அனுபவத்திலும் வளர்ந்தவர்கள்,. பிள்ளைகள் நம் பெற்றோர் ஆவது ஆரோக்கியமற்ற விடயமாகும்.












அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# மனதுக்குள் மத்தாப்பு வெளியில் மௌனம்!

## தமிழக அரசியல்வானில் இன்று!




இன்று (27.09.2014) ஜெயலலிதாவிற்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 10 வருடங்கள் அரசியலில் ஈடுபடமுடியாது என்ற சட்டமும் தமிழகத்தில் அதிர்ச்சியைக் கொடுத்தது. இருந்தாலும் மனதுக்குள் மத்தாப்புடன் ஆனந்த மயக்கத்தில் பல அரசியல்வாதிகளும் சினிமா நட்சத்திரங்களும் (நாளைய முதல்வர் கனவுகளில் மிதப்பவர்கள்) உள்ளனர் என்பதே உண்மை.

பலரது முதல்வர் ஆசைக்கு இருந்த தடுப்பு வலை கிழிக்கப்பட்டுவிட்டதாக உணர்கின்றனர். ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு என்று ஒருவர் இன்று இல்லாத நிலை. பலருக்கும் பரிசாக உள்ளது. கலைஞர் கருணாநிதி கிட்டத்தட்ட 14 வருடங்கள் முதல்வராகாமல் தடுத்தது எம்.ஜி.ஆர் அலை. இருந்தாலும் இவற்றை எல்லாம் தாங்கிப்பிடித்து மீண்டும் பதவிக்கு வந்தார். அதற்கு பலமான கட்டுமானமுள்ள தி.மு.கவும் ஒரு காரணம்.

இப்போ நிலமை வேறு. ஜெயலலிதாவின் அனுதாப அலை சற்றே ஓய!( பத்திரிகை அச்சுக்கு போவதற்கு முன் ஓய்தாலும் ஆச்சரியம் இல்லை) ஆரம்பமாகும் அடுத்த முதல்வர் அலை. இது அண்ணா தி.மு.க வுக்குள் மட்டுமல்ல, தி.மு.க. வுக்குள் மட்டுமல்ல, ஏன் காத்திருக்கும் விஜயகாந்துக்குள் மட்டுமல்ல, தலைவா விஜய்குள் மட்டுமல்ல! செந்திலுக்குள்ளும் கவுண்டாமணிக்குள்ளும் கூட இந்த ஆசை தோன்றலாம்.

ஆங்காங்கு இனிப்புக்கொடுத்தும் பட்டாசு சத்தம் போடாமல் வெடித்தும் மகிழ்கின்றனர். காலம் கனிவதாகவும் கனவுகள் நனவாகப் போவதாகவும் மனம் மகிழ்கின்றனர்.

ரஜினி காந்தை இரசிகர்களே பிடித்துவந்து முதல்வராகவும் அமர்த்தலாம். சற்று மாதங்களுக்கு அல்ல இன்னும் சில வருடங்களுக்கு திரையரங்கில் ஓடும் படங்களைவிட தமிழக அரங்கில் பல படங்கள் அரசியலாக ஓடும் என்பது திண்ணம். ஆண்டவன் தமிழகத்தை திரையுலகத்தில் இருந்து காத்தால் அதுவே பேரதிசயமாக இருக்கும்.





படங்கள்:வெற்றிமணி

## மட்டு நகரில் சஞ்ஜே சிவாவின் இசையில் பாடல் காட்சி ஒளிப்பதிவு!





மட்டுநகர் திருக்கோவில் **Dreambox Media Network** கலைக்குழுவினருடன் இணைந்து வெற்றிமணி சஞ்ஜே சிவாவின் இசையில் அமைந்த பாடல் ஒன்றுக்கு வெளிப்புறக் காட்சி படமாக்கப்பட்டது. முற்றிலும் தாயகத்தில் உள்ள உபகரணங்களைவைத்து ஒளிப்பதிவிற்கு உதவும் கிரேனாக மாற்றி படப்பிடிப்பை நடத்தினர். நடன ஆசிரியரின் பயிற்சிக்குப்பின் இளைஞர்கள் நடனமாடினர். முக்கிய பாத்திரத்தில் நவயுகா பங்குகொண்டு பாடல் காட்சியை அழகுபடுத்தினார். இளைஞர்கள் யாவரும் கல்விகற்றுக்கொண்டு பகுதிநேரமாக கலைப்படைப்புக்களைத் தருகின்றனர். அங்கு ஒரு இளைஞன் குறிப்பிடுகையில், இது பகுதிநேரம் அல்ல, இதுவே எமது மூச்சு என்றார். பாடல் காட்சிகள் எடுப்பதற்கும் குறும்படம் எடுப்பதற்கும் பெரிதும் அங்கு ஒத்துழைப்பது சூரியன் என்றால் மிகையாகாது. இங்கோ சூரியன்!!! அப்படி என்றால் என்ன என்று கேட்கவேண்டிய நிலை.

BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Offnungsziten:
Mo-Sa.10.00- 20.00 uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது.
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சீட்டுக்களை பெற்றுத்தருகின்றோம்.
- நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில் -
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு:
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Adler Str. 30, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369
Öffnungszeiten: Mo-Sa 10:00-20:00 Uhr // Email: bcntravels@hotmail.de, Web: www.bcnugonline.com

எமது இன்னுமொரு சேவை!
நீங்கள் வீடு கட்ட
அல்லது வீடு வாங்க
முடிவெடுத்து விட்டீர்களா ?
உங்களுடைய காப்புறுதிகள்
அனைத்தும் அதி உச்ச நலன்களை
தருபவையாகச் செய்துள்ளீர்களா ?
கூடிய கடனா ? அதிகளவு வட்டியா ?
அல்லது இரண்டுமா ?
கேள்விகள் உண்டா ?
தொடர்புகளுக்கு: Tel.: 0231-10876361
0231-58988630

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்









# ஈழத்தின் போர்க்கால இலக்கிய ஆவண நூலும்

## அகிலன் நினைவு தபாற் தலையும் கனடாவில் வெளியிடப்பட்டன

1989ம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி யாழ்நகரில் கொலை செய்யப்பட்ட யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவன் அகிலன் திருச்செல்வத்தின் 25வது ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த (07.09.2014) மாதம் 7ம் திகதி கனடாவின் ரொறன்ரோவில் நடைபெற்றது. இலண்டனில் வசிக்கும் நூலகவியலாளர் என். செல்வராஜா எழுதிய 'ஈழத்தமிழரின் போர்க்காலம் - இலக்கி யங்கள், ஆய்வுகள், பதிவுகள்' என்னும் வரலாற்று ஆவண நூல் அகிலன் நினைவாக இங்கு வெளியிடப்பட்டது.

கவிஞரும் எழுத்தாளருமான பொன்னையா விவேகானந்தன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். “இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மையப்படுத்தி உல களாவிய ரீதியில் வெளியான 250 வரையான நூல்களின் விபரங்களைக் கொண்ட இந்த நூல் அகிலன் நினைவாக வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது” என்று தமது ரையில் இவர் தெரிவித்தார். திரு. செல்வா வெற்றிவேல் தம்பதிகளுக்கு நூலின் முதற் பிரதி வழங்கப்பட்டது.

கனடியத் தபால் திணைக்களம் வெளியிட்ட அகிலன் உருவம் பொறித்த தபால் தலையை ஊடகவியலாளர் கமல் நவரட்ணம் வெளியிட்டு வைக்க, ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சியின் தவிசாளர் நீதன் சண்முகராஜா அதனைப் பெற்றுக் கொண்டதோடு இருவரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

### தந்தைக்காக தனையனைப் பலி எடுத்தனர்!

இந்திய இராணுவம் தமிழர் பகுதியை ஆக்கிரமித்திருந்த வேளையில் யாழ்ப்பாணம் 'முரசொலி' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய திருச்செல்வம் அவர்களைக் கொலை செய்யக் குறிவைத்த கொலைகாரர் அவர் ஏக புதல்வாரன அகிலனைப் பறித்தெடுத்தனர். தந்தைக்காக தனையனைப் பலி எடுத்தனர்! அன்றைய சூழலையும் அதன் பின்னணியையும் அப்போது அங்கு பத்திரிகையாளராகக் கடமையாற்றிய வாசகன் ரட்ணதுரை தமதுரையில் விபரித்தார்.

அகிலனின் கல்லூரித் தோழரான இளங்குமரன் அகிலனின் கல்வி, விளையாட்டு, இலக்கியம் மற்றும் சமூகப்பணி உட்பட்ட பன்முக ஆற்றல்களையும் அதிதிறமைகளையும் கவி வடிவில் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினார். செல்வி அனோஜினி குமாரதாசன் நிகழ்வினைத் தொகுத்து வழங்கினார். பஜனையுடன் ஆரம்பமான இந்நிகழ்வு 'வானம்பாடி' சிவாவின் பக்திப் பாடலைத் தொடர்ந்து இரவுப் போசனத்துடன் நிறை வுற்றது.




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# ஆசிரியரைப் பணிவோம்

முனைவர்
மனோன்மணி சண்முகதாஸ்


படம் : வெற்றிமணி

கல்வி மனிதனுக்குக் கண் போன்றது. அந்தக் கண்ணுக்குப் பார்வையைக் கொடுப்பவர், அறிவுக் கண்ணைத் திறந்துவைப்பவர் என ஆசிரியர் போற்றப்படுகிறார். அவர் மன இருளைப் போக்குபவர். விழிப்புணர்வைத் தருபவர். குரு எனவும் பெயர்பெற்றவர். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். பண்டைக் காலத்தில் வாய்மொழிக் கல்வி முறையே இருந்தது. இதனால் குருவிடம் பாடம் கேட்கும் மரபே நிலவியது. பாடத்தைக் கேட்டல், மனதிலே பதியவைத்தல் என்ற இரு திறன்களையும் குருவிடமிருந்தே எல்லோரும் பெற்றனர்.

வாழ்க்கைக்கான கல்வியைக் குருவிடம் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை குருவோடு தங்கியே கற்கும் முறைமை பேணப்பட்டது. இது “குருகுலக் கல்வி“ என அழைக்கப் பட்டது. இக்கல்வியில் அறநீதி புகட்டல், வித்தைப்பயிற்சி என்பன அடங்கியிருந்தன. ஏறக்குறைய 12 ஆண்டுகள் இக்கல்வி பயிற்றப்பட்டது. குருவுடன் உடனுறைந்து கற்பதால் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் முழுமையாகக் கற்கும் வாய்ப்பும் இருந்தது. குருபத்தினிக்கு வேண்டிய பணிகளையும் மாணவர்கள் செய்து குடும்பநிலையான அறிவையும் பெற்றனர்.குருவுக்கு செலுத்தும் தட்சணையாக இப்பணியே அமைந்தது.

குருகுலக் கல்வியில் இயற்கையின் ஆற்றல் பற்றிய தெளிவு சிறப்பாகக் கற்பிக்கப் பட்டது. குருவின் உறைவிடம் இயற்கைச் சூழலில் அமைந்திருந்தது. இயற்கை தரும் மூலப் பொருட்களால் குடில் அமைக்கப் பட்டது. உணவுத் தேவைக்கான மரம், செடி, கொடி வளர்ப்பு, பால் தேவையை நிறைவேற்ற விலங்கு வளர்ப்பு என்பனவும் கல்வியோடு இணைந்த பயிற்சிகளாகப் பேணப்பட்டன. இயற்கையும் நமது ஆசிரியரே என்பது சிறப்பாக உணர்த்தப்பட்டது. பூமியைத் தெய்வமாக மதித்து வழிபடும் மரபு பயிற்றப் பட்டது. தாய் தன் மடியிலே குழந்தையை வைத்துப் பேணி வளர்ப்பதுபோல நிலம் நம்மைத் தாங்கிநிற்கின்றது.

பொறுமை என்னும் பண்பை உணர்த்தும் நல்லாசிரியர் பூமியே. வெப்பத்தையும், வெள்ளத்தையும், பனிக்குளிரையும் அந்தந்தக் காலங்களில் பொறுமையோடு ஏற்று வாழப் பூமியே மனிதனுக்குப் பயிற்றுகிறது. வானமும் ஆசிரியராக நின்று மனிதனை வழிநடத்துகிறது. காலத்தோடு மழைவளம் நல்கி மனிதன் வாழுமிடத்தை வளம்படுத் துகிறது. வானம் பொய்க்காது காலமாரியைப் பொழியும் என்றதொரு நம்பிக்கையை மக்களிடம் சேர்த்துள்ளது.

வானத்திலே வலம்வரும் இரு சுடர்களான கதிரவனும் வெண்ணிலவும் மனிதனுக்குக் காலத்தைக் கற்றுத்தரும் கணித ஆசிரியர்கள். கதிரவன் நாளின்தொடக்கத்தை உணர்த்துகிறான். பகற்பொழுதின் தொடக்கத்தையும் முடிவையும் கணித்துக் காட்டும் நல்லாசிரியனாக நம்மோடு இருக்கிறான். வெண்ணிலா நமக்கு இரவில் ஒளிதரும் ஒரு சுடர் விளக்கு. தேய்வும் வளர்ச்சியும் என்னும் நிலைகளால் ஒரு மாத காலத்தை உணர்த்தும் இன்னொரு கணித ஆசிரியர். முழுநிலவு கண்டு அதன் தேய்வைப் பார்த்து மீண்டும் அது முழுநிலவாக வளர்ச்சியடையும் வரை கடந்து போகும் நாட்களைக் கணக்கிட நிலவு ஒரு நாட்காட்டி ஆசிரியர். மனித வாழ்வில் இறப்பும் பிறப்பும் மாறிவரும் என்பதை உணரவைக்கும் உளவள ஆசிரியராகவும் அமைபவர்.

நதியும் கடலும் கூட மனிதனை நெறிப்படுத்தும் நல்லாசிரியர்களே. நதி மனிதனை நீர்ப் பாசனத்திற்குப் பயிற்றுகிறது. வேளாண்மை செய்ய ஆற்றப்படுத்தும் ஆறும் ஆசிரியராக விளங்கு கிறது. ஓடிவரும் நீரைத் தேவைகளுக்குப் பயன்படுத்த மனிதனைப் பயிற்றுகிறது. ஆற்றங்கரை களிலே வாழும் வாழ்வியலைப் புகட்டுகிறது. நீரின் இன்றியமையாமையை மனிதன் மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் அறிய நதி வழிகாட்டும் ஆசிரியராக விளங்குகிறது.

கடல் மனிதன் வாழ்வை வளமாக்கப் பல விளைபொருட்களைப் பெற வழிகாட்டுகிறது. உப்பு, மீன், கடற்பாசி என உணவுப் பொருட்களைத் தேட வழிகாட்டியது. அதற்கு மேலாக மனிதன் அழகுப் புனைவுக ளுக்கான முத்து, இப்பி, சங்கு போன்ற பொருட்களையும் பெறுவதற்கு ஒரு களஞ்சியமாக அமைந்தது. கடல்வழிப் பயணம் செய்து வணிகம் என்ற தொழிற் பயிற்சியை வழங்கும் ஆசிரிய ராகக் கடல் விளங்கியது.

இந்த இயற்கை ஆசிரியர்களைப்போற்ற வேண்டுமென இளங்கோ சிலப்பதிகாரத்தில் பதிவு செய்துள்ளார். அதை வருமாறு காணலாம்:

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண்
குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்.
ஞர்யிறு போற்றுதும் ஞர்யிறு போற்றுதும்
காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேருவலம் திரித லான்.
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலிஉலகிற்கு அவனளி போல
மேல்நின்று தாம்சுரத்த லான்.

திங்களும் ஞாயிறும், மாமழையும் நம்மைப் பேணும் இயற்கைக் காவலர்கள். ஆதலால் அவர்க ளைப் போற்றி இளங்கோவடிகள் பாடியுள்ளார். அவர்களே நமது முதன்மை ஆசிரியர்கள்.

இயற்கை நமது ஆசிரியர் என்பதை இப்போது யாரும் நினைவிற் கொள்வதில்லை. ஆனால் இயற்கை என்னும் உலகறிந்த நல்லாசிரியரிடம் இன்றைய ஆசிரியர்கள் பெற வேண்டிய பல பயிற்சிகளுள. காலக்கணிப்பு, கோலப்புனைவு, கருவிக்கையாட்சி, மொழித்திறன், இசைப்புலமை, கொடைத்திறன் போன்றவற்றை இயற்கை என்னும் ஆசிரியரிடமிருந்து எளிதாகக் கற்றுக்கொள்ளலாம். கடிகாரம் இல்லாமல் காலம் கணிக்கும் நிலை பண்டைய மக்களிடம் இருந்தது. கதிரவன் நிழல் கணித்து காலக்கடப்பை உணர்த்தினர். இயற்கையின் வண்ணக் கோலங்களும் நிறமாற்றங்களும் மனிதனுக்கப் புனைவுத்திறனை நல்கின. கற்களும் மரங்களும் கொடிகளும் வில், அம்பு போன்ற கருவிகளை அமைக்கப் பயன்பட்டன. வேய் மூங்கிலும் விலங்குகளின் தோலும் இசைக் கருவிகளை அமைக்கப் பயன்பட்டன. காற்று, கடல், இலைகளின் சலசலப்பு, நீரோட்டத்தின் ஒலிக்குறிப்பு என்பன மொழியை உருவாக்கத் துணைசெய்தன. ஒலிப்பு முறையால் பெயரிடும் முறைமை தோன்ற இயற்கைஎன்னும் ஆசிரியரின் வழிகாட்டல் அடிப்படையாக அமைந்ததெனலாம்.

இன்று ஆசிரியரின்பணியைப் போற்று முகமாக ஆசிரியர்தினம் கொண்டாடப் படுகிறது. இந்த நிலை மாணவர்களுக்கு ஆசிரியரின் பணி பற்றிய சிறப்பினை விளக்குவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. குருகுலக்கல்வி முறையிலிருந்து பள்ளிக் கல்வி முறைக்கு இன்று மாணவர் மாறியுள்ளனர். அதனால் இயற்கையென்னும் முதன்மை ஆசிரியர் பற்றிய அறிவு அவர்களுக்கு ஊட்டப்படுவதில்லை.

நவீன கல்விப் பயிற்சி நிலையில் ஆசிரியர் பள்ளியில் மட்டும் தொடர்பு உடையவராக உள்ளார். மேலும் பொறிமுறைக் கல்வியின் முன்னேற்றம் ஆசிரியர் பயிற்றாமல் சுலபமாகவே கல்வி பயிலலாம் என்ற புதிய நம்பிக்கையை மாணவரிடையே தோற்றுவித்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு துணிவையும் தந்துள்ளது. பொறிமுறைக் கையாட்சியால் எதையும் வெல்லலாம் என நம்பியுள்ளனர். ஆனால் இயற்கை என்னும் ஆசிரியன் அவர்களை நல்வழிப் படுத்துவான். மனிதன் இயற்கையின் வழிகாட்டலில் வளமாக நலமாக வாழ்வான். எனவே அந்த இயற்கை என்னும் ஆசிரியனையே எந்நாளும் பணிந்து வாழ்வோம்.

VTM MiniMarkt und Kiosk
துரித பணமாற்றுச் சேவை!
Ria MONEY TRANSFER
இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும்
அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள்
NSB,BOC,HNB போன்ற வங்கிகளில்
நேரடியாகவும் மற்றும் அனைத்து
வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.
மாபெரும் மலிவு விற்பனை!
உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்


Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்




குறும் கதை: கே.எஸ்.சுதாகர்

சனிக்கிழமை மதியம். சாப்பாடு வாங்குவதற்காக 'கே.எஸ் ஸ்ரோர்' போயிருந்தேன். அந்தப் பல் பொருள் அங்காடியில் உணவு வகைகளும் செய்து விற்கின்றார்கள். காரை நிற்பாட்டுவதற்கு ஒரு தரிப்பிடம் தேடி போதும் என்றாகிவிட்டது. பொதுவாக சனிக்கிழமை என்றால் எங்கும் சனக்கூட்டம். காரைவிட்டு இறங்கியதும், என் பின்னாலே இரண்டு ஆப்பிரிக்கர்கள் வந்து நின்றார்கள்.

"லப் ரொப் வேண்டுமா சேர்?" இரண்டு பேருமே 'ரை' கட்டி கச்சிதமான ஆடைகளுடன் தோற்றமளித்தார்கள். இந்த இடத்தில் இப்படிப்பட்ட வியாபாரம் நடப்பது சகஜம்தான். இரண்டு வாரங்களுக்கு முன்னர் எனது நண்பன் ஒருவன் இதே இட்த்தில் ஒரு 'ஐ போன்' வாங்கியிருந்தான். இன்னமும் அதைப் பற்றியே சொல்லிப் புளுகிக் கொண்டிருப்பான்.

"எவ்வளவு காசு?"
"150 டொலர்கள்!"
பர்ஸ்-ல் 45 லொடர்கள் மாத்திரம் இருந்தன.
"பாவித்ததா புதிசா?"

"பிறாண்ட் நியூ சேர்" சொல்லிக் கொண்டே கையில் வைத்திருந்த பார்சலின் ஒரு நுனியைப் பிரித்து பெட்டியைக் காட்டினான் ஒருவன். பெட்டியில் பளிச்சென 'அசுஸ்' என்ற எழுத்துகள் தெரிந்தன.

பார்த்த மாத்திரத்தில் அதை வாங்கிவிட வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இன்றைய நிலவரப்படி 600 டொலர்கள் தேறும்.

"இதிலேயே நின்று கொள்ளுங்கள். காசு கொஞ்சம் குறைகின்றது. கடையில் என் நண்பர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களிடம் வாங்கி வருகின்றேன்."

"நாங்கள் நிற்கமாட்டோம். இது பொலிஸ் நடமாட்டம் உள்ள இடம். நீங்கள் காசுடன் வந்து காருக்குக் கிட்ட நில்லுங்கள். அதன் பின்னர் நாங்கள் வருகின்றோம்" சொல்லிவிட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

கடைக்குச் சென்று சாப்பாட்டிற்கு ஓடர் கொடுத்தேன். சாப்பாட்டிற்கு கிறடிற் கார்ட்டைப் பாவிக்கலாம். 100 டொலரை இரண்டு நண்பர்களிடம் ஐம்பது ஐம்பதாகக் கறந்து கொண்டேன். நண்பர்களுக்கு விஷயத்தைச் சொல்லவில்லை. கார் நிற்குமிடம் வந்து சுற்றுமுற்றும் உற்று நோக்கினேன். சொன்ன வாக்கைக் காப்பாற்றுபவர்கள் போல இருவரும் வந்து சேர்ந்தார்கள்.

"ஐந்து டொலர்கள் குறைகின்றன!"
"அதனாலென்ன பரவாயில்லை. குட் லக்."

காசும் பொருளும் இடம் மாறின. எப்பவும் கேட்ட விலையில் இருந்து சிறிதளவாவது குறைத்துக் குடுத்தால்தான் மனதுக்குத் திருப்தி. அந்தத் திருப்தியுடன் காருக்குள் ஏறி கதவுகளை லொக் செய்துவிட்டு பார்சலைப் பிரித்தேன். காரின் ஜன்னலைத் தட்டினார்கள். அவர்கள் இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என நான் நினைத்திருந்தேன்.

கண்ணாடியை நீக்கினேன்.

"இங்கே வைத்துப் பாராதீர்கள். பொலிஸ் உங்களை அப்பிவிடும்" சொல்லிவிட்டு விரைந்து சென்றார்கள். அவர்கள் சொல்வதும் சரிதான்.

லப் ரொப்பை காரின் பின்னே வைத்துவிட்டு, ஓடர் கொடுத்த சாப்பாட்டைப் போய் எடுத்து வந்தேன். காரை எடுத்துக் கொண்டு வேகமாக வீடு சென்றேன்.

600 டொலர் பெறுமதியான லப் ரொப்பை 145 இற்கு வாங்கிய மகிழ்ச்சி காரின் வேகத்தில். எவ்வளவு காசிற்கு வாங்கியதாக மனைவி பிள்ளைகளுக்குச் சொல்லலாம்? அவர்களிடம் முதலில் அதன் விலையை உய்த்துணரச் சொல்லவேண்டும்.
பின்னர் 300 டொலருக்கு வாங்கியதாகச் சொல்லுவோம். அப்பவும் லாபம் தானே! லப் ரொப்பை பார்ப்பதற்கு மனம் துடித்தது. இதயம் 'லப் டப்' என அடித்தது.
பிரதான வீதியில் காரை எங்குமே நிறுத்த முடியாது. பார்க் ஒன்றிற்கு அண்மையாக மரமொன்றின் பக்கமாக நிறுத்திக் கொண்டேன்.
அவசர அவசரமாக பெட்டியைச் சுற்றியிருந்த பேப்பரைக் கிழித்து எறிந்தேன். அழகான புத்தம் புதிய 'அசுஸ்' பெட்டி. பெட்டியைத் திறக்க உள்ளேயிருந்து விழுந்தன இரண்டு 'செங்கட்டிகள்'.
இதயம் ஒரு அளவு கணக்கின்றி 'லப் டப்... லப் டப்...' என அடிக்கத் தொடங்கியது.



## வெற்றிமணியின் அஞ்சலி!

### அமரர் இ.செல்வராஜா

**மண்ணில் 17.07.1950**
**விண்ணில் 15.09.2014**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் யேர்மனி டோட்மூண்ட் நகரை வதிவிடமாகவும் கொண்ட

**அன்பான என் இனிய நண்பா செல்வராஜா**

உன் மனம் வெண்கமலம் -இன்று இறைவன்
திருப்பாதங்களில்

உன் ஆத்மா நிலையான இன்பம் பெறும்.

ஆனந்தமான உன் முகம் மறைந்தாலும்
நாம் வாழும் வரை நீங்காது
உன் இளம் புன்னகை

அன்பு நண்பனே உன் பிரிவால் வாடும்
அன்பு மனைவி உற்றார் உறவினர்
நண்பர்களுடன் நாமும் உன் இழப்பை எண்ணிக்கலங்குகின்றோம்.

ஆத்மசாந்தி அடைவதாக! **வெற்றிமணியின் அஞ்சலி**





தீபாவளியை முன்னிட்டு 15.09.2014 முதல் 22.10.2014 வரை
மாபெரும் மலிவு விற்பனை!
30% வீதம் முதல் 50% வரை
Asia super markt
அனைத்து ஆடைகளும்
சிறப்புக் கழிவு விலையில்....
பலசரக்குப் பொருட்களையும்
எம்மிடம் மலிவாகப்பெற்று
பயன் பெறுங்கள்
Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



# நவராத்திரி விழாவும் அதன் மகிமையும்

திருமதி பராசக்தி சந்திரசேகரி
இளைப்பாறிய ஆசிரியர்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விற்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பள்ளிங்கு வாராதிடர்.

பக்தி மார்க்கத்தில் நாம் வருடாவருடம் பலவிதமான விழாக்களையும் பண்டிகைகளையும் கொண்டாடுகிறோம். இவை தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருவதாக எல்லாரும் கூறுவர். இறைவனை அடைவதற்கான வழிகள் நான்கு என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. அவை சரியை கிரியை யோகம் ஞானம் ஆகும். சரியை கிரியை பக்தி மார்க்கத்திற்குரியவை. யோகம் ஞானம் ஞான மார்க்கத்திற்குரியவை. பக்தி செய்யும் போது கூட நாம் பகுத்தறிந்து பக்தி செய்ய வேண்டும். நாம் எல்லோரும் நம் மூதாதையர் செய்தது போல் செய்தோம் என்று கூறுவோம். ஆனால் இக்காலத்துக் குழந்தைகள் ஏன் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கேட்டால் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் நம்பத் தகுந்த வகையில் பதில் சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும். தைப்பொங்கல் சிவராத்திரி வருடப்பிறப்பு ஆடிப்பிறப்பு நவராத்திரி தீபாவளி போன்ற பண்டிகை விழாக்களும் இன்று பல விரதங்களும் தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டு வரும் விசேட வைபவங்களாகும்.

இவற்றில் இன்று நவராத்திரி விழாவும் அதன் மகிமையும் என்னும் விடயம் சம்பந்தமாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். சிவனுக்குரியது சிவராத்திரி சக்திக்குரியது நவராத்திரி. அதாவது 9 இரவுகள் விழா எடுத்தலாகும். சிவசக்திகளின் மகிமையை கொண்டாடும் விழாதான் நவராத்திரி. புரட்டாதி மாதத்து வளர்பிறை தொடக்கம் நவமி ஈறாக உள்ள 9 நாட்களும் 10ம் நாள் வெற்றிக்குரிய நாளாக விஜயதசமி என்றும் இவ்விழாவை கொண்டாடி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. அதுவும் பூசை முதலியன இரவு வேளையில் செய்யப்பட்டதால் நவராத்திரி எனப்பட்டது. உலகில் உள்ள மக்களிடையே உள்ள அறியாமை என்ற இருளைப் போக்குவதற்காக சக்தியை வேண்டி வழிபாடு செய்யப்படும் என்பது ஆன்மீக விழக்கமாகும்.
முதல் 3 நாட்களும் வீரம் வேண்டி அதாவது தைரியம் உறுதி சக்தி வேண்டி துர்க்கையாகவும் அடுத்த
3 நாட்களும் செல்வம் வேண்டி மஹாலக்சுமியாகவும் கடைசி 3 நாட்களும் ஞானம் அதாவது கல்வி வேண்டி சரஸ்வதியாகவும் சிவசக்தியை கும்பத்தில் ஆரோகணித்து வழிபாடாற்றி தேவையானவற்றைப் பெறுவதற்காக விழா எடுக்கிறோம்.
உலக வாழ்க்கைக்கு செல்வம் வேண்டும். அதையும் சரியான வழியில் சம்பாதிக்கவும் பயன்படுத்தவும் தைரியம் உறுதி வேண்டும். நல்ல வழியில் இவற்றை நடாத்த கல்வி வேண்டும். எனவே இவை மூன்றும் முக்கியமான வாழ்க்கைக்கு தேவையானவையாகும். மகிடாசுரன் என்ற அரசன் தேவர்களுக்கு கஸ்டம் கொடுக்க தேவர்கள் சக்தியை நோக்கி வழிபட சக்தி சிவனை நோக்கி தவம் செய்து 9ம் நாள் அஸ்ட சக்திகள் என்ற ஆயுதங்களைப் பெற்று மகிடாசுரனை வதம் செய்தார் என்றும் 10ம் நாள் விஜயதசமி என்று வெற்றி விழா கொண்டாடப்பட்டது என்றும் புராணக் கதைகள் கூறுகின்றன. 10ம் நாள் இரவு வாழைவெட்டு என்ற விழாவும் இதன் அடிப்படையில்தான் கொண்டாடப்படுகிறது. இதன் அர்த்தத்தை பார்க்கப் போனால் அசுரர் தேவர் என்று வேறுவேறாக எவருமில்லை. அறியாமை என்ற அஞ்ஞான இருள் சூழ்ந்த இக்கால கட்டத்தில் காமம் கோபம் பற்று பேராசை அகங்காரம் என்ற 5 விகாரங்களும் மற்றும் வேண்டாத தீய குணங்களும் நடத்தையுமுடைய மனிதன் அசுரனாவான். கடவுளின் குணங்களான ஆத்மாவில் மறைந்திருக்கும் அன்பு அமைதி சக்தி பணிவு பொறுமை தூய்மை போன்ற தெய்வீகக் குணங்கள் நிறைந்தவர்கள் தேவர்கள் ஆவர். மனிதன்தான் அசுரனும் ஆகலாம் தேவனும் ஆகலாம். இவை எங்கள் கையிலேதான் உள்ளது. இந்த யுத்தம் எங்களுக்குள்ளேயேதான் நடைபெறுகிறது. எங்களில் இருக்கும் அசுர குணங்களை அழித்து தெய்வீக குணங்களை தந்து எங்களை தேவர்கள் ஆக்க வேண்டுமென்று இந்த விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

விஜயதசமி அன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதல் பயிர்ச்செய்கை புதுக்கணக்கு பதிதல் போன்ற நற்கருமங்கள் செய்தலும் இதனடிப்படையில் தான். ஆண்களின் 5 விகாரங்களும் பெண்களின் 5 விகாரங்களும் தான் 10 தலை இராவணனாவனேயொழிய 10 தலையுடைய மனிதன் இருக்க முடியாது. அந்த இராவணனை (விகாரங்களை) அழித்து வெற்றிவாகை சூடிய நாள்தான் தசரா என கொண்டாடப்படுகிறது.

நாம் வழிபடும் தேவ தேவியர் வானத்திலிருந்து திடீரென அவதரித்தவர்கள் அல்ல. பூமியில் வாழும் நம்மைப் போன்றவர்கள்தான். சத்திய திரேதாயுகம் சுவர்க்கமாகும். பின்பு துவாபர கலியுகம் வருகிறது. இப்போது கலியுகத்தின் இறுதிக்கட்டம் நடக்கிறது. தர்மங் கெட்டு அதர்மம் தலை தூக்கி நிற்கிறது என்பது யாவரும் அறிந்ததே. 'தர்மங் கெட்டு அதர்மம் தலை தூக்கி நிற்கும் போது நான் வருவேன்' என்று பரமாத்மா பரமதந்தை கூறியபடி கலியுக முடிவில் மனித உடலில் அவதரித்து கீதை ஞானத்தை தருகிறார். அவரை இனங்கண்டு அறிந்து அவரருளிய ஞானத்தின் மூலம் அவருடன் ஒரு இணைப்பை ஏற்படுத்தி தவ வலிமையை பெற்று எல்லாம் அப்பரம் பொருளே அவர் ஒருவரைத் தவிர வேறுயாருமில்லை என திடசங்கற்பம் செய்து தம்மை கடவுளின் சேவைக்கு முழுமையாக அர்ப்பணித்து கடவுளிற்குச் சமனாகி பூசைக்குத் தகுதியானவர்கள் ஆகியவர்களே நாம் வழிபடும் தேவ தேவியர்கள் ஆவார்கள்.
நாங்கள் விரதம் இருந்து அனுட்டிக்க எங்களில் உள்ள அசுர கணங்களை சிவசக்தி வந்து அழிக்கும் பாவனைதான் வாழை வெட்டு ஆகும். விஜயதசமியை அடுத்து கௌரி நோன்பு விரதம் அனுட்டிக்கப் படுகிறது. சிவசக்தி சிவனை அடைவதற்கு 21 நாட்கள் நோன்பிருந்து சிவனை அடைந்தார் என்று புராணங்கள் கூறுகிறது. அவ்வாறு வழிபட்டு 21 பிறவிகளுக்கு சுவர்க்க வாழ்வு பெற்றார். இதுவே உண்மை. 21 நாட்கள் கௌரி நோன்பிருந்து கடவுள் காட்டிய வழிப்படி நடந்து அவருக்குச் சமனாகி பூஜிக்குத் தகுதி வாய்ந்த சிவசக்திகள் ஆக வேண்டும். வருடா வருடம் இவ்விரதத்தை எல்லோரும் செய்கிறார்கள் என்று அனுட்டிப்பதல்ல. சிறிது சிறிதாக எங்களுக்குள் இருக்கும் அசுர குணங்களை நீக்கி தெய்வீக குணங்களை எடுப்பதற்கு பகுத்தறிந்து பக்தி செய்து எங்களுக்குள் மாற்றம் கொண்டு வர வேண்டும். தனிமனித மாற்றம் உலக மாற்றமாகும். இவ்வாறு உலகம் மாற்றமடைந்து பொன்னுலகமாக திகழும். அதுவே சுவர்க்கம் ஆகும். சுவர்க்கம் வேறு நரகம் வேறு அல்ல. நரகமாக இருந்த உலகம் சுவர்க்கமாக மாற வேண்டும். அது எங்கள் கைகளிலேதான் உள்ளது. அதற்கு நாம் எல்லோரும் ஆத்மாக்கள் என்ற உணர்வுடன் வாழ வேண்டும். நான் ஒரு ஆத்மா, இந்தச் சரீரம் நானல்ல. இந்தச் சரீரம் ஒரு வாகனம் போன்றது. ஆத்மா சாரதியாக இருந்து இந்தச் சரீரத்தை இயக்குககிறது. ஒரு ஆடை போன்றது. ஆடையை மாற்றி மாற்றி அணிந்து கொண்டு இந்த உலகமாகிய நாடக மேடையில் நடிக்கிறோம் என்ற உணர்வு வேண்டும். ஆத்மா என்ற உணர்வுடன் எங்கள் தந்தையாகிய பரமாத்மாவுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி அவருடைய நற்குணங்கள், சக்திகள் எல்லாம் பெற்று அவருக்குச் சமனாகி சுவர்க்கத்தை ஸ்தாபிக்க நாங்கள் அவரது உதவியாளராக வேண்டும். இந்தச் சரீரத்தில் இருந்து கொண்டே அந்தச் சரீரத்தை மறந்து ஆத்ம உணர்வுடன் வாழ வேண்டும்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்றார் ஆறுமுக நாவலர். முக்தி என்பது விடுதலை இன்பம் என்பது சுவர்க்க வாழ்வு. அதாவது ஜீவன் முக்தி ஆகும். நாம் பூஜிக்கத் தகுதி வாய்ந்தவராகி தேவராகி சுவர்க்க வாழ்வு வாழ வேண்டுமென்று உறுதி பூண்டு நவராத்திரி விரதத்தை அனுட்டித்து பெருவாழ்வு வாழ்வோமாக.



MÖNCHENGLADBACH நகரில்
TEL. 02161 2946428
HANDY. 01774036454
FAX. 02161 2473832
PRABA SUPERMARKT
Asiatische & Afrikanische Lebensmitteln
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள்
மற்றும் மளிகைப் பொருட்கள் அனைத்தும் சிறப்புவிலையில்
நீண்ட காலமாக எம்முடன் இணைந்திருந்த வாடிக்கையாளர்களுடன்
மீண்டும் இணைவது மகிழ்ச்சியானதே!
E-MAIL. praba_shop@hotmail.de
HINDENBURGSTRASSE 212
41061 MÖNCHENGLADBACH
புகையிரத நிலையத்திற்கு மிக அருகாமையில்
எமது நிறுவனம் அமைந்துள்ளது.


அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

கடுகுமணி - 13

# பசிப்பிணி மருத்துவம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்





தன்னுடைய வாழ்நாளைக்கூட இன்னொருவனுக்குக் கொடுக்க எண்ணியவனும் இந்த உலகத்திலே வாழ்ந்துள்ளான். பணத்தைக் கொடுக்கலாம். பல பொருட்களைக் கொடுக்கலாம். ஆனால் தன் வாழ்நாளையே கொடுக்க எண்ணுவது மிக உயர்ந்த எண்ணமாகும். இவ்வாறு எண்ணியவன் வேறு யாருமில்லை ஒரு தமிழ் மன்னன்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த சோழன் கிள்ளிவளவன்தான் அந்த மன்னன். தன்னுடைய நாட்டு வேளாண் பெருமகன் பண்ணனுக்குத்தான் "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்று தன்வாழ்நாளை ஈந்தவன்.

பசி எல்லோருக்கும் வருவது. சிலர் பசியைப் போக்க வழியில்லாதிருக்கிறார்கள். இந்நிலை ஒருபோதும் இருக்கக்கூடாது. இதனாலேதான் பாரதி "தனியொருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்." என்று பாடினான். பசியுடன் சென்ற சிலர் பண்ணனுடைய இல்லத்தைத் தேடிச் செல்கிறார்கள். அவனுக்கு ஒரு சிறப்பான பெயர் சூட்டி, பசிப்பிணி மருத்துவன் வீடு தூரத்திலுள்ளதோ அருகிலுள்ளதோ என்று வழிப்போக்கர்களிடம் கேட்டனர்.

அதற்கு அவர்கள் பண்ணனுடைய வீடு பற்றிக் கூறுகிறார்கள்:

"பழமரங்கள் பழுக்கும் காலத்திலே பறவை இனங்கள் அம்மரத்திலே ஆரவாரத்துடன் மிகுந்த ஒலியுடன் பழங்களை உண்பதுபோல, பண்ணனுடைய வீட்டிலே உணவு உண் பாருடைய ஆரவார ஒலி கேட்கும். எறும்புகள் முட்டைகளைக் கொண்டு மேட்டுநிலத் திலே போவது போன்று சிறார்கள் கையிலே சோறுகொண்டு போவதைக் காணலாம்."
பசியும் வழிநடைக் களையும் தீர்ந்துபோக உணவளிக்கும் அந்தப் பண்ணன் என்னும் பசிப்பிணி மருத்துவனின் வீட்டை எளிதாகக் கண்டுகொள்ளலாம் என்று உணர்த்தினார்கள்.

தானத்திலே சிறந்தது அன்னதானம். நன்றாக உண்பவர்களுக்கு இதன் பொருள் நன்றாக விளங்காமல் போய்விடலாம். ஒரு வேளை உணவுக்கு அல்லற்படுபவர்களுக்கு இத்தானத்தின் சிறப்பு நன்றாக விளங்கும். இதனாலேதான் எல்லாச் சமயங்களும் ஏழைகளுக்கு உணவளியுங்கள் என்று கூறுகின்றன.



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941
தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு
Robert koch Str.5
58239 Schwerte

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....
ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery


தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel:0711 61 58 976 Mob:0170 33 44 059
Ludwig Str.92
70197 Stuttgart

அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பெருமையுடன் வழங்கும்
இன்னிசை மாலை - 2014
தென்னிந்திய திரைப்பட பாடகர்கள்
Airtel சுப்பர் சிங்கர் நிக்கில் மெத்யூ
Airtel சுப்பர் சிங்கர் கிருஷ்ணன்
Airtel சுப்பர் சிங்கர் ஸ்ரீ நிஷா
Airtel சுப்பர் சிங்கர் பிரியங்கா
இசை இந்திய கலைஞர்களுடன்
Gajan's Free Birds Music Band
சீர்காழி புகழ் மலேசியா இராஜராஜசோழன்
T.M.S. குரலில் S. கஜன்

LONDON - 18-10-2014,
மாலை 6.00 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு கதவுகள் திறக்கப்படும்
Preston Manor School Carlton avenue east, Wembley ha9 8na
Tel : 07435118196
GERMANY - 25-10-2014 ,
மாலை 6.00 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு கதவுகள் திறக்கப்படும்
Dietrich - Keuning - Haus, Leopoldst-50-58 44147 Dortmund
Tel : 01792432781
FRANCE - 01-11-2014,
மாலை 6.00 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு கதவுகள் திறக்கப்படும்
Espacè Andrè Maignè 18bis, rue du 14 Juillet-94270 LE KREMLIN-BICETRE
Tel : 0605623405/0751338011
E-mail : info@innisaimaalaiworld.com Web : innisaimaalaiworld.com
Alaveddy Arunodaya. College old. Student. Association.

Germany
Dortmund
நகரில்
25.10.2014
Dietrich Keuninig-Haus
Leopold Str.50-58
Dortmund
பிரவேசச் சீட்டுக்கள் கிடைக்கும் இடம்:
Orientalische Textilien & Schmuck
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377
ASIA BAZAR
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303
சிற்றுண்டிகள்:
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE

# இன்று தில்லை நடராஜரின் ஆனந்த தாண்டவத்திற்கு பொருள் கூறும் பொறுப்பையே விஞ்ஞானம் தனதாக்கி மகிழ்கின்றது.





## ஆடற்கலைமணி ரெஜினி சத்தியகுமார்

## வெள்ளிவிழாக்காணும் ஆடற்கலாலயம்

ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று எண்ணுகின்றோம். இந்த எண்ணிக்கைகள் எதனை நோக்கிய நகர்வுகள் என்பதனைப் பொறுத்தே எமது உணர்வுகளுக்கு மதிப்பும் மகிழ்சியும் கிட்டுகின்றன. இப்போது ஒன்றரை மணிநேரமாக பஸ்சுக்கு காத்து நிற்கின்றோம் இன்னும் வந்தபாடில்லை என்று உணரும்போது மனதில் சலிப்பு ஏற்படுகின்றது. இரண்டரை மணிநேரம் போனதே தெரியவில்லை என்று நல்லபடம் பார்த்த இரசிகின் மனத்தில் சலிப்புக்கு பதில் மகிழ்ச்சி பூக்கின்றது.

ஒன்று இரண்டு மூன்று என்று வருடம் முப்பது ஆயிரம் சேமிப்பவன், வருடம் இருபத்தைந்து ஆனதும் ஏழு ஏழரை இலட்சம் சேமித்துவிட்டோம் என்று மனதுக்குள் மகிழலாம். ஆனால் கலைவாழ்வில் பொதுவாழ்வில் இருபத்தைந்து வருடம் அதாவது வெள்ளிவிழாக் காண்பவர்கள், மனம்விட்டு வெளிப்படையாக மகிழலாம். காரணம் அங்கு அடிப்படை அவர்களது உழைப்பு பிறரை மகிழ்விப்பதற்காகவே இருந்தது என்பதேயாகும்.

கலைகள் தாயகத்தில் என்றால் என்ன புலம்பெயர் தேசத்தில் என்றால் என்ன புறத்தே விரிந்து அழகு சமைத்தாலும், அது அகத்தையும் மலரவைக்கும் அற்புத மருந்தாக இருப்பது உண்மை என இன்று விஞ்ஞான உலகமும் நம்புகின்றது. இதனால் மேற்குலகம் மருந்து டப்பாக்களைத் தூக்கி எறிந்து விட்டு கீழத்தேசங்களுக்கு படையெடுத்து நமது கலைகளையும், இயற்கை மருத்துவத்தையும் பெறுகின்றனர்.

இன்று தில்லை நடராஜரின் ஆனந்த தாண்டவத்திற்கு பொருள் கூறும் பொறுப்பையே மேற்குலக விஞ்ஞானம் தனதாக்கி மகிழ்கின்றது. ஒவ்வொரு நடன அசைவுக்கும் எந்த எந்த நாடிகள் தசைகள் தொழில்படுகின்றன அவை எது எதனைச் சீர்செய்கின்றன என மருத்துவரீதியாகவும் விளக்கம் கொடுக்கின்றன.. மேலும் கலைகளைக் கற்பவர்கள் ஒன்றுக்கும் இலாயக்கு அற்றவர்கள்! அதுதான் அதுகள் அதுபடிக்குதுகள் என்று அகிர்திணையில் நம்நாட்டில் கிண்டல் செய்த காலம் மலையேறி!! இன்று கலைகள் கற்பவர்களது அவதான சக்தியை கலைகள் விருதிசெய்கின்றன. அதனால் அவர்கள் மற்றவர்களைவிட அதிகம் அவதானசக்தி உடையவர்களாகத் திகழ்கிறார்கள் என்று அடித்துச் சொல்கின்றது விஞ்ஞாம்.

இப்படியான பயன் தரும் அருங்கலைகளில் பரதமும் ஒன்று. புலம்பெயர்நாட்டில் பல ஆண்டுகளாக பல நடன ஆசிரியர்கள் தொழிலாக அன்றி, தமிழ் மொழிக்கு ஒரு வழி நூலாகவும் இந்தப் பரதத்தை கற்பித்து வருகின்றனர். யேர்மனியில் தமிழ்மொழி இன்றும் நம்பிள்ளைகளிடத்தில் வீட்டில் பேச்சு மொழியாக இருப்பதற்கு இந்தப் பரதக்கலையும் ஒரு காரணமாகும். அப்படி என்றால் தந்தையார். அதாவது ஆண்கள் பரதம் பயில்வது குறைவு, பெண்கள் மொழிக்கு முக்கியமானவர்கள் நம் மொழியை தாய் மொழி என்றுதானே சொல்கின்றோம். குழந்தைகள் வளரும் பருவம் பெரும்பகுதி தாயுடனேயே நகர்கின்றது. அப்போது தாய்தான் உணவுடன் கலந்து மொழியையும் ஊட்டவேண்டும்.

பரதம் அந்த மொழி அறிவை பெரும்பாலான தமிழ் பிள்ளைகளுக்கு ஊட்டியுள்ளது. யேர்மனியில் பரதம் தமிழ்மொழியில் பயிற்றுவிக்கப் படுகின்றது (இதுவரை) என்பது இங்கு முக்கியமான ஒரு தரவாகும்.

பரதக்கலையை தான் புலம்பெயர்ந்து வந்த யேர்மனிநாட்டில் பயிற்றுவிக்க 1989 ஆண்டு மேபுஷ் நகரில் ஆடற்கலைமணி, நிருத்தியஜோதி திருமதி ரெஜினி சத்தியகுமார் அவர்கள் ஆடற்கலாயம் அமைத்தார். இன்று கிறிபீல்ட் நகரில் தொடர்ந்து சிறப்பாக இயங்கிவருகின்றது. இதுவரை 12 மாணவிகளுக்கு பரதக்கலையில் சிறப்பாக அரங்கேற்றம் செய்துள்ளார்.

யேர்மனியில் நடைபெற்ற போட்டிகளில் இவரது பல மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டி ஆசிரியைக்கும் ஆடற்கலாலயத்திற்கும் பெருமை சேர்த் துள்ளனர். நடன ஆசிரியையின் சிறப்புப்பற்றி சொல்வது என்றால் முதலில் பரதத்திற்குரிய முழுமையான இயல்பைக் கொண்டவர். அன்பு, பாசம், கருணை, அழகு, அடக்கம். இவை அனைத்தும் திருமதி ரெஜினி சத்தியகுமார் அவர்களிடத்தில் அடக்கம். தாயகத்தில் தனது 5 வயதில் கலாபவனம் ஏரம்பு சுப்பையா அவர்களிடமும் பின் திருமதி சாந்தினி சிவநேசனிடமும் 15வருடங் கள் முறைப்படி பரதம் கற்று, பரதத்தில் மேலும் மேலும் தேர்ச்சிபெற தமிழ்நாடு அடையாறு அரசினர் கல்லூரியில் கற்று Dip in Dance (ஆடற்கலைமணி) ஆனார். இன்று 25 வருடங்களாக தான் பெற்ற கலையை யேர்மனியில் ஆடற்கலாலயம் அமைத்து நமது எதிர்காலச் சந்ததியனருக்கு பயிற்றுவித்து வருகின்றார். ஆடற்கலைமணி ரெஜினி சத்தியகுமார் அவர்களின் கலைச்சேவை என்றும் சிறக்க வெற்றிமணி வாழ்த்துகின்றது.

## வெள்ளிவிழா!

**ஆடற்கலாலயம் கிறீபில்ட் ஜேர்மனி**

**காலம்:18.10.2014 சனிக்கிழமை- நேரம்: 15 மணி**

மாணவ மாணவிகள் வழங்கும் பரதநாட்டியநிகழ்ச்சிகள்

இடம்: **Centrum Westende - -Westender Straße 30**
**47138 Duisburg-Meiderich**







அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# அன்று கே.பி.சுந்தராம்பாள் இன்று அனுஷ்காவா? நயன்தராவா?



அனுஷ்கா, நயன், சமந்தா, காஜல் சம்பளம் எவ்வளவு தெரியுமா?

ஒரு காலத்தில் நடிகர்களுக்கு இணையாக அதற்கும் சற்றுமேலாக சம்பளம் பெற்ற நடிகை யார் தெரியுமா? சுந்தராம்பாள். ஔவையார் படத்தில் நடிக்க ஒரு லட்சம் பெற்ற முதல் நடிகை கே.பி. சுந்தராம்பாளே!

பின்னர் நடிகர்கள்தான் அதிக சம்பளம் பெற்றனர். இதில் மக்கள் திலகம் முதலிடம் நடிகர்திலகம் சிவாஜி இரண்டாம் இடம். ஆனால் சில குறிப்பிட்ட படங்களுக்கு சிவாஜி அதிகம் பெற்றுள்ளதாகச் செய்திகளும் உண்டு. பின்னர் ரஜினி கமல் விஜய் அஜித் சூர்யா என்று சம்பளம் ஏறிக்கொண்டே செல்கின்றது.

சரி தற்போது உள்ள நடிகைகள் யார் யார் எவ்வளவு பார்ப்போமே!

நடிகைகளில் அனுஷ்கா தான் அதிகபட்சமாக ரூ.2.5 கோடி சம்பளம் வாங்குகிறார். கோலிவுட் ஹீரோயின்களில் அதிகம் சம்பளம் வாங்குபவராக இத்தனை நாட்களாக இருந்தவர் நயன்தாரா. ஆனால் தற்போது அனுஷ்கா நயன்தாராவை பின்னுக்கு தள்ளிவிட்டார். இந்த ஆண்டு நடிகைகளில் யார், யார் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்ற விவரம் வருமாறு,

அனுஷ்கா அனுஷ்கா ஒரு படத்திற்கு ரூ.2 கோடி முதல் ரூ.2.5 கோடி வரை பெறுகிறார். அவர் தெலுங்கு படமான ருத்ரம்மா தேவியில் நடிக்க ரூ.2.5 கோடி சம்பளம் பெற்றுள்ளார்.

நயன்தாரா நயன்தாரா படம் ஒன்றுக்கு ரூ.1.5 கோடி சம்பளம் வாங்குகிறாராம். அவர் தற்போது இது நம்ம ஆளு, நண்பேன்டா ஆகிய படங்களில் நடித்து வருகிறார். மேலும் கை நிறைய படங்கள் வைத்துள்ள அவர் தனது சம்பளத்தை விரைவில் ரூ.2 கோடியாக உயர்த்தலாம் என்று கூறப்படுகிறது.

சமந்தா தெலுங்கில் முன்னணி நாயகியான சமந்தா படம் ஒன்றுக்கு ரூ1.5 கோடியில் இருந்து ரூ.2 கோடி வரை கேட்கிறாராம். தெலுங்கு படமான அல்லுடு சீனுவில் நடிக்க அவர் ரூ.2 கோடி சம்பளம் கேட்டிருக்கிறாராம்.

காஜல் காஜல் அகர்வால் ஒரு படத்தில் நடிக்க ரூ.1.5 கோடி சம்பளம் வாங்குகிறார். அவர் கையில் தெலுங்கு, இந்தி மற்றும் தமிழ் படங்கள் உள்ளன.

ஸ்ருதி விஷால் ஜோடியாக பூஜை படத்தில் நடித்து வரும் ஸ்ருதி படம் ஒன்றுக்கு ரூ.1 கோடி சம்பளம் வாங்குகிறார்.

ஹன்சிகா ஹன்சிகா படத்திற்கு ரூ.75 லட்சம் வாங்குகிறார். அவர் கையில் 7 தமிழ் படங்கள் உள்ளன.

தமன்னா தமன்னா தெலுங்கு படங்களில் நடிக்க ரூ.1 கோடி வாங்குகிறாராம். த்ரிஷா ஒரு படத்தில் நடிக்க ரூ.1 கோடி வாங்குகிறார். எங்கே சிநேகா சிக்கனமாகிவிட்டாரோ?




# திரை உலகம்

## கிடைக்கும் என்றால் கிடைக்கும்! கிடைக்காது என்றால் கிடைக்காது!





ரஜினிகாந்த், அஜீத், விஜய் என முன்னணி ஹீரோக்கள் பல பட வாய்ப்புகளை தவறவிட்டுள்ளனர். நடிகர்களுக்கு நல்ல பட வாய்ப்புகள் வந்தாலும் கால்ஷீட் பிரச்சனை உள்ளிட்ட காரணங்களால் வாய்ப்பை ஏற்க முடியாமல் போகலாம். அப்படி ஒரு சில காரணங்களால் படங்களை தவற விட்ட நட்சத்திரங்களை பார்ப்போம்

கஜினி ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் வெளியான கஜினி படத்திற்கு முதலில் மிரட்டல் என பெயர் வைத்து போஸ்டர்களில் அஜீத்தின் போட்டோ இருந்தது. அதன் பிறகு தான் மிரட்டல் கஜினியாகி அதில் சூர்யா நடித்தார்.

காக்க காக்க காக்க காக்க படத்திற்காக கௌதம் மேனன் அஜீத்தை தான் முதலில் அணுகியுள்ளார். அதன் பிறகு விக்ரமிடமும் கேட்டுள்ளார். இறுதியில் சூர்யாவை நடிக்க வைத்துள்ளார்.

முதல்வன் முதல்வன் படக்கதையை ஷங்கர் ரஜினியை மனதில் வைத்து எழுதியுள்ளார். ஆனால் ரஜினி நடிக்க மறுக்க ஷங்கர் விஜய்யை நடிக்குமாறு கேட்டார். அரசியல் என்பதால் விஜய்யும் மறுக்க அர்ஜுன் நடித்தார்.

ஐ படத்தில் ரஜினியை நடிக்க வைக்க நினைத்துள்ளார் ஷங்கர். இறுதியில் விக்ரம் நடித்துள்ளார்.

கோ கே.வி. ஆனந்த் தனது கோ படத்தில் சிம்பு நடிப்பதாக அறிவித்தார். ஆனால் கடைசி நேரத்தில் சிம்பு விலக அந்த படத்தில் ஜீவா நடித்தார்.

தீனா தீனா படத்தில் நடிக்குமாறு அப்போது புதுமுக இயக்குனரான ஏ.ஆர். முருகதாஸ் விஜய்யை தான் கேட்டுள்ளார். அதன் பிறகு அந்த படம் அஜீத்திடம் சென்றுள்ளது. புதுமுக இயக்குனராக இருந்தாலும் அவர் மீது நம்பிக்கை வைத்து நடிக்க ஒப்புக் கொண்டார் அஜீத்.

நான் கடவுள் பாலா தனது நான் கடவுள் படத்தில் அஜீத் தான் நடிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அது நடக்காமல் போக அதில் ஆர்யா நடித்தார்.

வாழ்வில் என்ன சினிமாவிலும்தான் கிடைக்கும் என்றால் கிடைக்கும் கிடைக்காது என்றால் கிடைக்காது!

## தொப்புள்கொடி உறவு! மருத்துவத்தின் முக்கியத்துவம்!

மருத்வத்தை உணர்ந்து ஒவ்வொரு பெற்றோரும் ஸ்டெம் செல்லை தானமாக தர முன்வர வேண்டும் என்று நடிகை ஐஸ்வர்யா ராய் கூறினார். ரத்த அணுக்கள் தொடர்பான பல்வேறு நோய்களுக்கான சிகிச்சையில் ஸ்டெம் செல் முக்கியப் பங்கு வகிக்கிறது. குழந்தை பிறந்த 10 நிமிஷத்துக்குள் அதன் தொப்புள் கொடியிலிருந்து ஸ்டெம் செல்லை எடுத்து அதனை பிரத்யேகமாக பாதுகாப்பதன் மூலம், எதிர்காலத்தில் அந்தக் குழந்தையோ, அதன் உறவினர்களோ ரத்தப் புற்றுநோய் உள்ளிட்ட ரத்த அணுக்கள் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு ஸ்டெம் செல்லைக் கொண்டு எளிதில் சிகிச்சை அளிக்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்திய அளவில் கடந்த 10 ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட ஒரு லட்சம் ஸ்டெம் செல் அலகுகளை (யூனிட்) லைப்ஃசெல் எனும் நிறுவனம் பிரத்யேகமாகப் பாதுகாத்து வருகிறது.

ஐஸ்வர்யா ராய் இந்நிலையில் ஸ்டெம் செல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக சென்னையில், ஸ்டெம் செல் வங்கியை லைப்ஃசெல் நிறுவனம் துவங்கியது. இதனை பிரபல நடிகை ஐஸ்வர்யா ராய் துவக்கி வைத்தார். ஸ்டெம்செல் தானம் இந்த நிகழ்ச்சியில் ஐஸ்வர்யா ராய் பேசுகையில், நான் கர்ப்பமாக இருந்தபோது லைஃப்செல் நிறுவனத்தினர், ஸ்டெம் செல் தானம் தொடர்பாக என்னை அணுகினர். நான் எனது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மருத்துவர்களிடம் கலந்து ஆலோசித்து, தொப்புள்கொடி ஸ்டெம் செல்லை தானமாகத் தர முடிவு செய்தேன். விழிப்புணர்வு அவசியம் இதன் மருத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு பெற்றோரும் ஸ்டெம் செல்லை தானமாக தர முன்வர வேண்டும் என்று கூறினார்.

தமிழில் நடிப்பேன் தமிழில் நல்ல கதை அமைந்தால் நடிப்பேன் என்றும் கூறியுள்ளார். எந்திரன் 2வில் நடிக்க தயார் என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டு சென்றுள்ளார் ஐஸ்.



### ஒரே ஒரு சிக்கல்!

நேரம் தவறாமையில் உள்ள ஒரே சிக்கல்,
உங்களைப் பாராட்ட அங்கே யாரும் வந்திருக்க
மாட்டார்கள் என்பது தான்
Franklin P. Jones




T.J.B Brothers ஸ்தாபனத்தின் இரண்டாவது கிளை ஸ்தாபனம்
Mönchengladbach நகரில் மனங்கவர்ந்த சேவையில்....

Asiatischer super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்- கடல் உணவுப் பொருட்கள் - வீட்டுக்குத்தேயைான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

TJB BROTHERS

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
Handy:0178 60 68 780

Sun TV நீண்ட நாள் பிரதிநிதிகள்

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

தமிழ்க்கடை
Parkhofstraße-97
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER

துரித பணமாற்றுச் சேவை
Money Transfer




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

Ria MoneyGram துரித பண மாற்றுச் சேவை!



19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA
Textile & Jewellery

அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Sep. முதல் புதிய முகவரியில் எமது நிறுவனம்!



info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy

EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

02131 273692
Rishi 0174 96 44 965
Further Str. 156
41462 Neuss



ASIA BAZAR

Ria Money Transfer MoneyGram

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

யேர்மனியில் டோட்முண்ட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை, இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!
திங்கள் முதல் சனிவரை காலை 11.30 முதல் மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் 16.00 -22.00 மணி வரை

Tel:0231- 7252859
Annen Str.1
44137 Dortmund



எமது நிறுவனத்தின் 10 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

Jasmine Silk House

மாபெரும் மலிவு விற்பனை!

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

100€ பெறுமதியான சீக்குயின் சாறிகள்
ஒரு சாறி 30€ 2 வாங்கினால் 50€ மட்டுமே!

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்



HP:0173 1937 325 Tel:02102 844744 T.Mohanadas

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex

தரம் அதுவே நிரந்தரம்

Asia & Afro Großhandel & Einzelhandel

6 வது ஆண்டில் உங்கள் அபிமான ஸ்தாபனம்

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாராவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



மாதம்தோறும் எமது மலிவுவிற்பனையை பார்வையிட
Web.Star-impex.net

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de

Tel:0231 860 26 96 Fax: 0231/8602698